
தின பூமி
thinaboomi.com
பூமி: 33 சுற்று: 340 ஐப்பசி 01
RNI Regn. No.55306/93 TN/CCN/556/2012-2014
சென்னை, சனி, அக்டோபர் 18, 2025 ▸சென்னை ▸மதுரை ▸திருச்சி ▸கோவை ▸நெல்லை ▸சேலம் ▸வேலூர் ▸புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00



## ஹங்கேரியில் விரைவில் புதினுடன் 2-வது சந்திப்பு அமெரிக்க அதிபர் தகவல்

...2-ம் பக்கம்

## குஜராத் துணை முதல்வராக ஹர்ஷ் சிங்வி, மேலும் 25 பேர் அமைச்சர்களாக பதவியேற்பு

...3-ம் பக்கம்

## ஒருநாள் போட்டி கேப்டன் பதவியில் இருந்து நீக்கம் ஏன்? ரோகித்திடம் காம்பீர் விளக்கம்

....6-ம் பக்கம்





● சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று பஞ்சாப் மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் எஸ்.ஹர்பஜன் சிங், நீர்வளத்துறை அமைச்சர் பிரேந்தர்குமார் கோயல் ஆகியோர் சந்தித்து பஞ்சாப் மாநில அரசின் சார்பில் ஸ்ரீஆனந்த்பூர் சாஹிப்பில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள 9-வது சீக்கிய குரு ஸ்ரீகுரு தேக் பகதூரின் 350-வது ஆண்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்க வேண்டுமென்று அழைப்பு விடுத்தனர். உடன் தலைமைச்செயலாளர் உள்ளார்.

### ஓய்வுபெற்ற ஐகோர்ட் நீதிபதி கே.என்.பாஷா தலைமையில்

# ஆணவ படுகொலையை தடுக்க புதிய ஆணையம்

### சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, அக். 180-

**ஓய்வுபெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் சாதி ஆணவப் படுகொலையை தடுக்க புதிய ஆணையம் அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**



● சென்னை சட்டமன்ற பேரவையில் நேற்று ஆணவ படுகொலைகளை தடுக்கும் நோக்கில் உரிய சட்டம் இயற்ற தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுக்கும் என்று தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

**சீர்திருத்த இயக்கங்கள்**

சாதிய ஆணவப் படுகொலை விவகாரம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் உரையாற்றியதாவது:- அயோத்திதாசப் பண்டிதர், தந்தை பெரியார், தமிழ்த் தென்றல் திரு. வி.க., புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா ஆகியோர் சமூக சீர்திருத்தச் சிந்தனைகளை தமிழ் மண்ணில் விதைத்தார்கள். கல்வி, வேலைவாய்ப்பு, அதிகாரம் பொருந்திய பதவிகளில் அனைவருக்கும் சமவாய்ப்பு, சம அதிகாரம் ஆகியவற்றைத் தருவதன் மூலமாக யாவரும் ஒருவரே என்பதை உருவாக்கவே சீர்திருத்த இயக்கங்கள் போராடியது, வாதாடியது.

**சாதி பெயரே கூடாது...**

சீர்திருத்தச் சிந்தனை தமிழ் மண்ணில் அதிகம் விதைக்கப்பட்டது. இடைக்காலத்தில் புகுந்தவர்களால் தொழில் வேற்றுமையானது; சாதி வேற்றுமையானது. வேற்றுமை விதைக்கப்பட்டதும், ஒற்றுமைக்கான குரல்கள் தமிழ் மண்ணில் உரக்க எழுந்ததை காண்கிறோம். அனைத்து சாதியினரை அர்ச்சகராக்கி இருக்கிறோம்; சமநீதி, சமூக நீதி உறுதிமொழி எடுக்கிறோம். பள்ளி, கல்லூரி விடுதிகளில் சாதி பெயரே கூடாது என சமூக நீதி விடுதிகளாக பெயர் மாற்றியுள்ளோம், மாற்றி இருக்கிறோம். சமூகநீதி - சமத்துவம் - சகோதரத்துவம்-பொதுவுடைமை - பொது உரிமை கல்வி உரிமை - அதிகாரஉரிமை ஆகிய கொள்கைகள் தான் வேற்றுமையை, பகைமையை விரட்டும். அதனைத் தான் நாங்கள் செய்து வருகிறோம். இதன் மூலமாகதான் சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முடியும்.

> **அனைத்து சாதியினரை அர்ச்சகராக்கி இருக்கிறோம், பள்ளி, கல்லூரி விடுதிகளில் சாதி பெயரே கூடாது என சமூக நீதி விடுதிகளாக பெயர் மாற்றியுள்ளோம். சமூகநீதி - சமத்துவம் - சகோதரத்துவம் - பொதுவுடைமை - பொது உரிமை கல்வி உரிமை - அதிகார உரிமை ஆகிய கொள்கைகள் தான் வேற்றுமையை, பகைமையை விரட்டும். அதனைத் தான் நாங்கள் செய்து வருகிறோம்.**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

**பிரதமரிடம் கோரிக்கை**

சமூகங்களின் பெயர்களில் 'ன்' விகுதியை நீக்கி 'ர்' என மாற்ற சட்டம் இயற்ற வேண்டும் என பிரதமரை சந்தித்தபோது கோரிக்கையை முன்வைத்தேன். எதற்காகவும் ஒருவரை, மற்றொருவர்

(கடைசி பக்கம் பார்க்க)

### சட்ட மசோதாக்கள் தொடர்பாக தமிழ்நாடு அரசு தொடர்ந்த

# கவர்னருக்கு எதிரான 2 வழக்குகளில் 4 வாரங்களில் தீர்ப்பு: தலைமை நீதிபதி

புதுடெல்லி, அக். 18-

**தமிழ்நாடு அரசு தொடர்ந்த கவர்னருக்கு எதிரான 2 வழக்குகளில் 4 வாரங்களில் தீர்ப்பு வழங்கப்படும் என்று தலைமை நீதிபதி தெரிவித்துள்ளார். மேலும், மசோதாவுக்கு காலக்கெடு விவகாரத்தில் குடியரசுத் தலைவர் எழுப்பிய கேள்விகளுக்கு விடை காணும் வழக்கின் முடிவு தெரிந்த பிறகு, இதனை விசாரிக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு சட்டசபையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக சட்டத்தில் திருத்தம் செய்யும் மசோதாவை நிறைவேற்றியது. இந்த மசோதா மாநில கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. வழக்கமான நடைமுறையின்படி, கவர்னர் மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்கவோ அல்லது விளக்கத்திற்காக திருப்பி அனுப்பவோ வேண்டும். ஆனால் கவர்னர் ஆர்.என்.ரவி அதனை குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யும் வகையில் அனுப்பி வைத்தார். இதற்கு அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

கவர்னரின் இந்த முடிவுக்கு எதிராக தமிழ்நாடு அரசு சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளது. அந்த மனுவில், கவர்னரின் இந்த நடவடிக்கை தன்னிச்சையானது என அறிவிக்க வேண்டும் என்றும் அதேவேளையில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் இயற்றி அனுப்பி வைக்கும் மசோதாக்களை கவர்னர் கையாளும் விதம் அரசியல் சாசனத்திற்கு எதிரானதாக உள்ளது என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இதேபோல் கலைஞர் பல்கலை. மசோதாவுக்கு கவர்னர் ஒப்புதல் வழங்காமல் ஜனாதிபதிக்கு அனுப்பியதை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது. தமிழ்நாட்டு விளையாட்டு பல்கலை. மசோதா வழக்கையும் சேர்த்து விசாரிக்க தமிழ்நாடு அரசு வழக்கறிஞர் ஹரிஷ்குமார் முறையீடு செய்தார். 2 வழக்குகளும் நேற்று விசாரிக்கப்படும் என்று தலைமை நீதிபதி தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் கவர்னர் ஆர்.என்.ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு, சுப்ரீம் கோர்ட்டில் நேற்று விசாரணைக்கு வந்தது. தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் சிங்வி, வில்சன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர். மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு கவர்னர் அனுப்பியது அரசியல் சாசனத்துக்கும், சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கும் எதிரானது என தமிழ்நாடு அரசு சார்பில் வாதிடப்பட்டது.

மசோதாவுக்கு காலக்கெடு விவகாரத்தில் குடியரசுத் தலைவர் எழுப்பிய கேள்விகளுக்கு விடை காணும் வழக்கின் முடிவு தெரிந்த பிறகு, இதனை விசாரிக்கலாம் என தலைமை நீதிபதி தெரிவித்தார். தனக்கு பதவிக்காலம் இன்னும் 4 வாரங்களே இருப்பதால், அதற்கு முன்பாக இவ்வழக்கில் முடிவு தெரியும் எனவும் அவர் கூறினார்.

### கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பான விசாரணை:

# சி.பி.ஐ. குழுவினர் கரூர் வருகை

கரூர், அக். 18-

**விஜய் கூட்ட நெரிசல் துயரம் தொடர்பாக பிரவீன்குமார் ஐ.பி.எஸ் தலைமையிலான சி.பி.ஐ குழு நேற்று கரூர் வந்தது. அவர்களிடம் எஸ்.ஐ.டி வசம் உள்ள ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டது.**

கரூரில் கடந்த 27-ம் தேதி விஜய் பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த வழக்கை சுப்ரீம் கோர்ட் சி.பி.ஐ-க்கு மாற்றி உத்தரவிட்ட நிலையில், ஐ.பி.எஸ் பிரவீன்குமார் தலைமையிலான குழுவினர் நேற்று கரூர் வந்தனர். கரூர் வேலுச்சாமிபுரம் பகுதியில் கடந்த 27-ம் தேதி தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். இந்த பிரச்சாரத்தின் போது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். தமிழக அரசு சார்பில் இது தொடர்பான வழக்கு, ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையிலான ஒரு நபர் விசாரணை ஆணையத்துக்கு உத்தரவிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றம் சிறப்பு புலனாய்வு குழுவுக்கு உத்தரவிட்டு, அந்த குழுவானது தொடர்ந்து விசாரணை நடத்தி வந்தது.

சிறப்பு புலனாய்வு குழு விசாரணையை தடை செய்ய வேண்டும் என்றும், சி.பி.ஐ அமைக்க வேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குகள் தொடரப்பட்டன. அந்த வழக்கினை விசாரித்த சுப்ரீம் கோர்ட் கடந்த 13-ம் தேதி சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிட்டது. கரூர் வழக்கு விசாரணைக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்ட நிலையில், ஐ.பி.எஸ் அதிகாரி பிரவீன் குமார், விசாரணை நடத்த கரூர் வந்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் அமைந்துள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான சுற்றுலா மாளிகையில் சி.பி.ஐ அதிகாரிகள் தங்கி உள்ளனர்.

பிரவீன்குமார் ஐ.பி.எஸ் தலைமையில், ஏ.டி.எஸ்.பி முகேஷ்குமார் மற்றும் டி.எஸ்.பி ராமகிருஷ்ணன் உள்ளிட்ட அதிகாரிகள் கொண்ட குழுவினர் கரூர் வந்தனர். கரூர் வந்துள்ள சி.பி.ஐ அதிகாரிகளிடம் எஸ்.ஐ.டி வசம் உள்ள ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டது. விரைவில் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று விசாரணையை தொடங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தங்கம் விலை மீண்டும் உச்சம்: ஒரு பவுன் ரூ.97,000-ஐ கடந்தது

சென்னை, அக். 18-

**சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கம் விலை நேற்று (அக்.17) வரலாறு காணாத புதிய உச்சத்தைத் தொட்டது. அதன்படி, தங்கம் விலை ஒரு பவுன் ரூ.97,000-ஐ தாண்டி விற்பனையானது. இது நகை வாங்குவோர் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

கடந்த செப்.6-ம் தேதி ரூ.80,040 ஆக இருந்த ஒரு பவுன் தங்கம் விலை அக்.7-ல் ரூ.90,400 ஆக உயர்ந்தது. நேற்று அக்.17-ம் தேதி ஒரு பவுன் ரூ.97,600-க்கு விற்பனையானது. சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப தங்கம் விலையில் ஏற்ற இறக்கம் காணப்படுவது வழக்கம். அதன்படி ட்ரம்ப் வரி விதிப்பு, எச்1பி விசா கட்டணம் உயர்வு, போர்ச் சூழல்கள் எனப் பல்வேறு அரசியல், பொருளாதார சூழல்களால் சர்வதேச அளவில் பெரிய முதலீட்டாளர்கள் மட்டுமின்றி சிறிய முதலீட்டாளர்களும் தங்கம் மற்றும் வெள்ளியில் முதலீடு செய்யத் தொடங்கி உள்ளனர். இதனால், இவற்றின் தேவை அதிகரித்து, விலை உயர்கிறது. விரைவில் பவுன் தங்கம் ரூ.1 லட்சத்தை தொடும் என்று கணிக்கப்படுகிறது.

அதேபோல் பிரிக்ஸ் நாடுகளும், டாலருக்கு மாற்றான சக்திவாய்ந்த கரன்சியை உருவாக்கும் முனைப்பில் உள்ளதால், அந்த நாடுகளும் தங்கத்தின் மீதான முதலீட்டை அதிகரித்து வருகிறது. இதுவும் தங்கம் விலை உயர்வுக்குக் காரணம். இந்தியாவில் பண்டிகை காலம் என்பதாலும் தங்கம், வெள்ளி விலை ஏற்றம் காண்கிறது. ஆனால், பண்டிகை காலம் என்பது தற்காலிக காரணம் தான். முக்கியக் காரணம் சர்வதேச பொருளாதார, அரசியல் சூழல்களே.

அதன்படி நேற்று (அக்.17) சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.300 உயர்ந்து ஒரு கிராம் ரூ.12,200-க்கும், பவுனுக்கு ரூ.2400 உயர்ந்து ஒரு பவுன் ரூ.97,600-க்கும் விற்பனை ஆகிறது. இது நகை வாங்குவோர் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வெள்ளி விலை ரூ.3 குறைந்து ஒரு கிராம் ரூ.203-க்கு விற்பனையானது. கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.2,03,000-க்கு விற்பனையானது.

**கடைசி 5 நாட்கள் விலை நிலவரம்:**

1) 17-10-2025- ஒரு பவுன் (22 காரட்) ரூ. 97,600.
2) 16-10-2025- ஒரு பவுன் (22 காரட்) ரூ. 95,200.
3) 15-10-2025- ஒரு பவுன் (22 காரட்) ரூ. 94,880.
4) 14-10-2025- ஒரு பவுன் (22 காரட்) ரூ. 94,600.
5) 13-10-2025- ஒரு பவுன் (22 காரட்) ரூ. 92,640.

# பிரதமர் மோடி-இலங்கை பிரதமர் சந்திப்பு

### மீனவர்கள் நலன் குறித்து விரிவாக ஆலோசனை

புதுடெல்லி, அக். 18-

**இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரியா, பிரதமர் மோடியை நேற்று சந்தித்து பேசினார். அப்போது அவர்கள் மீனவர்கள் நலன் குறித்து ஆலோசனை செய்ததாக தகவல் வெளியாகியுள்ளது.**



இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரியா மூன்று நாள் பயணமாக நேற்று முன்தினம் டெல்லி வந்தார். அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது, இலங்கைக்கு இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் கல்வி - திறன் மேம்பாட்டில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் பற்றி அவர்கள் விவாதித்ததாக ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பின்னர் இலங்கை பிரதமர், டெல்லியில் உள்ள இந்து கல்லூரிக்கு சென்றார். இவர் இந்த கல்லூரியின் முன்னாள் மாணவி ஆவார். பின்னர் மாணவர்களுடன் கலந்துரையாடினார். இந்த நிலையில் நேற்று ஹரிணி அமரசூரியா, பிரதமர் மோடியை சந்தித்து பேசினார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரியாவை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். கல்வி, பெண்களுக்கு அதிகாரமளித்தல், புதுமையான கண்டுபிடிப்புகள், மேம்பாட்டு ஒத்துழைப்பு மற்றும் நமது மீனவர்களின் நலன் உள்ளிட்ட பல்வேறு துறைகள் குறித்து விரிவான ஆலோசனை நடத்தப்பட்டது. நெருங்கிய அண்டை நாடுகளாக, நமது இரு நாட்டு மக்களின் செழிப்புக்கும், பகிரப்பட்ட பிராந்தியத்திற்கும் நமது ஒத்துழைப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது" என்று தெரிவித்துள்ளார்.

# தமிழக சட்டப்பேரவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு

### 16 சட்ட மசோதாக்கள் நிறைவேற்றம்

சென்னை, அக். 18-

**தமிழக சட்டசபை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 16 சட்ட மசோதாக்கள் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டன.**

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் தமிழக சட்டசபை கடந்த 14-ம் தேதி கூடியது. அன்றைய தினம் மறைந்த முக்கிய தலைவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மேலும், வால்பாறை தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் டி.கே.அமுல் கந்தசாமி மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைவரும் மவுன அஞ்சலி செலுத்தியதும் அன்றைய கூட்டம் அத்துடன் ஒத்திவைக்கப்பட்டது.

அதனையடுத்து 15-ம் தேதி (புதன்கிழமை), 2025-2026-ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக்கோரிக்கைகள் பேரவையில் அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணிக்கு கூட்டம் தொடங்கியதும் முதலில் கேள்வி நேரம் நடந்தது. கேள்வி நேரம் முடிந்ததும் 2025-2026-ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெற்றது.

இந்த நிலையில், கடைசி நாளான நேற்று (17-ம் தேதி) 2025-2026-ம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு பதில் அளித்து நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார். அத்துடன் சட்டசபை கூட்டம் நிறைவடைந்தது. கடைசியாக பேசிய சபாநாயகர் மு.அப்பாவு, தமிழக சட்டசபை கூட்டம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுவதாக தெரிவித்தார்.

இந்த 4 நாட்கள் கூட்டத்தில் 16 சட்ட மசோதாக்கள் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டன. அடுத்து, 2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் கவர்னர் உரையுடன் தமிழக சட்டசபை கூடும். தொடர்ந்து, பிப்ரவரி மாதம் 2026-2027-ம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவித்தார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| 484.53 | 124.55 |
| பாயிண்ட் 83,952.19 | பாயிண்ட் 25,709.85 |



**தங்கம்**
1 சவரன் ₹97,600
1 கிராம் ₹12,200



**வெள்ளி**
1 கிலோ ₹203,000
1 கிராம் ₹203.00

**டாலர்** ₹88.03

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

# ஹங்கேரியில் விரைவில் புதினுடன் 2-வது சந்திப்பு
## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தகவல்

**வாஷிங்டன், அக். 18-**



புதினுடன் அலாஸ்காவில் சந்தித்து பேசிய நிலையில், 2-வது பேச்சுவார்த்தை ஹங்கேரி நாட்டில் உள்ள புடாபெஸ்ட் நகரில் நடைபெற உள்ளதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உக்ரைன், ரஷ்யா இடையிலான போர் சுமார் 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகள் முயற்சித்தன. ஆனால் போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. இந்த போரால் உக்ரைன் நாட்டைச் சேர்ந்த லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்து அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

முன்னதாக கடந்த ஆகஸ்ட் மாதம் அலாஸ்காவில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மற்றும் ரஷ்ய அதிபர் புதின் ஆகியோர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த பேச்சுவார்த்தை மூலம் உக்ரைன்-ரஷ்யா மோதலுக்கு தீர்வு ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதில் குறிப்பிடத்தக்க தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.

இதனிடையே, ரஷ்யாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் மீது கடுமையான வரிவிதிப்பு நடவடிக்கைகளை ட்ரம்ப் மேற்கொண்டார்.


இந்த சூழலில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி நேற்று அதிபர் ட்ரம்ப்பை சந்தித்து பேசினார். வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பின் போது உக்ரைனின் பாதுகாப்பு, ஆற்றல் தேவைகள் மற்றும் ரஷ்யா மீதான தடைகளை அதிகரிப்பது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், நேற்று முன்தினம் ரஷ்ய அதிபர் புதினை தொடர்பு கொண்டு ட்ரம்ப் பேசினார். அந்த உரையாடலின் மூலம் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என ட்ரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இந்த நிலையில், விரைவில் புதினை நேரில் சந்தித்து பேச உள்ளதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஏற்கனவே அலாஸ்காவில் இருவரும் சந்தித்து பேசிய நிலையில், 2-வது பேச்சுவார்த்தை ஹங்கேரி நாட்டில் உள்ள புடாபெஸ்ட் நகரில் நடைபெற உள்ளதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவில் மாணவி பலாத்காரம்:
# குற்றவாளிக்கு மரண தண்டனை நிறைவேற்றம்

**வாஷிங்டன், அக். 18-**

அமெரிக்காவில் மாணவி பலாத்காரம் செய்த குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.



அமெரிக்காவின் மிசிசிப்பி மாகாணம் டிப்பா நகரைச் சேர்ந்த ஒரு மாணவி 1993-ம் ஆண்டு தனது வீட்டில் இருந்து கடத்திச் செல்லப்பட்டாள். பின்னர் அந்த மாணவியை பலாத்காரம் செய்து கொன்றதாக சார்லஸ் க்ராபோர்டு (வயது 59) என்பவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பான வழக்கு விசாரணையில் அவர் குற்றவாளி என உறுதியானது. எனவே சார்லசுக்கு 2018-ம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இதனை எதிர்த்து அவரது தரப்பு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர். ஆனால் கீழ் கோர்ட்டின் தீர்ப்பை சுப்ரீம் கோர்ட்டும் உறுதி செய்து உத்தரவிட்டது. எனவே சார்லசுக்கு விஷ ஊசி செலுத்தி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில், அமைச்சர் தங்கம் தென்னரசு 2025-26-ம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக்கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு பதிலுரை அளிப்பதற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம்:
# பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் தோல்வி

**பாரீஸ், அக். 18-**

பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தில் தோல்வி ஏற்பட்டது.

பிரான்சில் சமீப காலமாக கடும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதனை சமாளிக்க பட்ஜெட்டில் சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளுக்கான நிதியை குறைக்கும் யோசனையை பிரதமர் செபாஸ்டியன் லெகோர்னு முன்வைத்தார். இது நாடு முழுவதும் எதிர்ப்புகளை கிளப்பியது. எனவே அவருக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் குதித்தனர். இதனால் அவர் தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்தார்.

அதன்பிறகு புதிய பிரதமராக யார் நியமிக்கப்படுவார் என்ற கேள்வி எழுந்தது. ஆனால் செபாஸ்டியனையே மீண்டும் பிரதமராக நியமித்து அதிபர் இம்மானுவேல் மேக்ரான் உத்தரவிட்டார். இந்தநிலையில் நாடாளுமன்றத்தில் அவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதில் தீர்மானத்துக்கு எதிராக 271 பேர் வாக்களித்தனர். ஆனால் பெரும்பான்மை பெற 289 வாக்குகளை பெற வேண்டும். நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி யடைந்ததால் அவரது பதவி தப்பியது. எனினும் இந்த ஆண்டு இறுதிக்குள் 2026-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்ய வேண்டிய கட்டாயத்தில் அவர் உள்ளார்.

# நவீன தமிழகத்தை கட்டமைத்த இயக்கம் அ.தி.மு.க: இ.பி.எஸ்.

**சென்னை, அக். 18-**



திராவிடக் கொள்கையை செயல் வடிவமாக்கி, நவீன தமிழ்நாட்டைக் கட்டமைத்த இயக்கம் அ.தி.மு.க. என்று அதன் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.


அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- மக்களால், மக்களுக்காக இயங்கும் ஒப்பற்ற இயக்கமாம் நம் அ.தி.மு.க.-ன் துவக்க விழாவான இன்று (நேற்று), அண்ணா-வழி-திராவிடம் இணைய இதழின் அச்சுப் பிரதியை வெளியிட்டேன்.

சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை ஆகிய உயரிய விழுமியங்களால் கட்டி எழுப்பப்பட்ட திராவிடக் கொள்கையை செயல் வடிவமாக்கி, நவீன தமிழ்நாட்டைக் கட்டமைத்த இயக்கம் அ.தி.மு.க.. ஆனால், நாம் உயர்த்திப் பிடித்த நம் உன்னதக் கொள்கையாம் திராவிடத்தை, தன் குடும்ப நலனைக் காக்கும் கவசமாக மாற்றிவிட்டது தி.மு.க. முதல் குடும்பம்.

தீயசக்தி தி.மு.க.-வின் தந்திரங்களை, சூதுகளைத் தோலுரித்து, உண்மையான திராவிடத்தின் மாசற்ற வாரிசு அ.இ.அ.தி.மு.க. தான் என்ற வரலாற்று பறைசாற்றும் வகையில், இந்த மாதம் இருமுறை இணைய இதழை கழக உடன்பிறப்புகளும், பொதுமக்களும் தவறாமல் படித்து, தங்களுக்காக எப்போதும் உழைக்கும் இயக்கமான அ.தி.மு.க.-ன் புகழுக்கு மென்மேலும் வலுசேர்க்க வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஜப்பான் முன்னாள் பிரதமர் காலமானார்

**டோக்கியோ, அக். 18-**



ஜப்பான் முன்னாள் பிரதமர் டோமிச்சி முர்யமா நேற்று காலமானார்.

ஜப்பான் முன்னாள் பிரதமர் டோமிச்சி முர்யமா, உடல்நலக்குறைவு காரணமாக அவரது சொந்த ஊரான ஒய்டா நகரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி முர்யமா நேற்று உயிரிழந்தார். அவருக்கு வயது 101.ஜப்பான் சோஷியாலிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவரான டோமிச்சி முர்யமா, கடந்த 1994-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1996-ம் ஆண்டு ஜனவரி மாதம் வரை ஜப்பானின் பிரதமராக பதவி வகித்தார். கடந்த 1995-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ந்தேதி முர்யமா வெளியிட்ட மன்னிப்பு அறிக்கை மிகவும் பிரபலமானதாகும்.

கடந்த 1945-ம் ஆண்டு, ஜப்பான் அரசு நிபந்தனையின்றி சரணடைந்த பின்னர் இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தது. அந்த தினத்தின் 50-வது ஆண்டு நினைவு நாளையொட்டி முர்யமா ஒரு மன்னிப்பு அறிக்கையை வெளியிட்டார். அதில், போர்க்காலங்களில் ஜப்பான் ராணுவம் நடத்திய போர்க்குற்றங்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் அத்துமீறல்களுக்கு மன்னிப்பு கோருவதாக அவர் கூறினார்.

அவரை தொடர்ந்து ஜப்பான் பிரதமராக பதவி வகித்த அனைவரும், ஜப்பானின் போர்க்குற்றங்களுக்காக மன்னிப்பு கோரினர். ஆனால் ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே, கடந்த 2013-ம் ஆண்டிற்கு பிறகு மன்னிப்பு கோருவதை நிறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் விமான விபத்து: 3 பேர் பலி

**மிச்சிகன், அக். 18-**

அமெரிக்காவில் சிறியரக விமான விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்கா மிச்சிகனில் உள்ள பாத் டவுன்ஷிப் பகுதியில் சிறிய ரக விமானம் ஒன்று கீழே விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது. இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 3 பயணிகள் உயிர் இழந்தனர். விமானம் நடுவானில் பறந்த போது விமானியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது தெரியவந்தது. இதனால் அந்த பகுதியே புகை மண்டலமாக காட்சி அளித்தது. விபத்துக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. இது தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது.

## ரேபரேலியில் அடித்துக் கொல்லப்பட்ட
# தலித் நபரின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ராகுல் ஆறுதல்



**டெல்லி, அக். 18-**

ரேபரேலியில் அடித்துக் கொல்லப்பட்ட தலித் நபரின் குடும்பத்தினரை ராகுல் காந்தி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

நாடு முழுவதும் தலித்துகளுக்கு எதிராக கொடுமைகள், கொலைகள் மற்றும் பாலியல் வன்கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன. நேற்று காலை, என்னைச் சந்திக்கக் கூடாது என அந்தக் குடும்பத்தை என்று அரசாங்கம் மிரட்டியது.

கடந்த அக்டோபர் 2 ஆம் தேதி தலித் சமூகத்தை சேர்ந்த ஹரிஓம் வால்மீகி (38 வயது) என்ற நபர் தனது உறவினரின் கிராமத்திற்கு சென்றுகொண்டிருந்தபோது கும்பல் ஒன்றால் வழிமறிக்கப்பட்டார். வால்மீகி, திருட்டு கேங் -ஐ சேர்ந்தவர் என குற்றம்சாட்டி அந்த கும்பல் சரமாரியாக அடித்துள்ளது. இதில் வால்மீகி உயிரிழந்தார். அடுத்த நாள் காலை கிராமத்தினரால அங்கு அவரின் உடல் கண்டு பிடிக்கப் பட்டது. இதன் வீடியோ வைரலான நிலையில் திருட்டு வதந்தியின் பேரில் தலித் நபர் அடித்துக் கொல்லப்பட்டது அம்மாநில அரசியலிலும் எதிரொலித்தது. இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை 10 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் மக்களவை எதிர்கட்சித் தலைவரும் ரேபரேலி தொகுதியின் எம்.பி.யுமான ராகுல் காந்தி, நேற்று காலை டெல்லியில் இருந்து புறப்பட்டு ரேபரேலியில் உள்ள பதேபூர் கிராமத்திற்கு சென்று, வால்மீகியின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். இதன் போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், "சில நாட்களுக்கு முன் அரியானாவில் ஒரு தலித் ஐபிஎஸ் அதிகாரி தற்கொலை செய்து கொண்டார். நான் அங்கு சென்றேன், நேற்று இங்கே வந்திருக்கிறேன். இந்த குடும்பம் எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை. அவர்களுக்கு எதிராக ஒரு குற்றம் இழைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அவர்களே குற்றவாளிகளைப் போலத் நடத்தப்படுகிறார்கள்.

அவர்களை வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கவில்லை. அவர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள். அவர்கள் கேட்பதெல்லாம் நீதி மட்டும் தான். 'எங்கள் மகன் கொல்லப்பட்டார். இந்த கொலை வீடியோவில் பதிவாகியுள்ளது. எங்களுக்கு நீதி வேண்டும்...' என்று கேட்கிறார்கள். இந்த குடும்பத்தில் பெண் இருக்கிறார், அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப் பட வேண்டும், ஆனால் அரசாங்கம் அவர்களை வீட்டுக்குள் பூட்டி வைத்திருப்பதால் அவரால் அதைச் செய்ய முடியவில்லை.

நாடு முழுவதும் தலித்துகளுக்கு எதிராக கொடுமைகள், கொலைகள் மற்றும் பாலியல் வன்கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன. முதலமைச்சரிடம் (யோகி ஆதித்யநாத்) நான் கேட்பதெல்லாம், அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அவர்கள் மதிக்கப் பட வேண்டும். குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மாறாக குற்றவாளிகள் பாதுகாக்கப்படக் கூடாது. நேற்று காலை, என்னைச் சந்திக்கக் கூடாது என அந்தக் குடும்பத்தை என்று அரசாங்கம் மிரட்டியது. பாதிக்கப்பட்ட குடும்பம் என்னைச் சந்திக்கிறதா இல்லையா என்பது முக்கியமல்ல, ஆனால் இவர்கள் குற்றவாளிகள் அல்ல என்பது தான் முக்கியம்.

அவர்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. நான் இறந்தவரின் குடும்பத்தை சந்தித்து, அவர்கள் சொல்வதைக் கேட்டேன். காங்கிரஸ் கட்சியும் நானும் அந்தக் குடும்பத்திற்கு முடிந்த அனைத்து உதவிகளையும் செய்ய எங்களால் முடிந்தவரை முயற்சிப்போம். நாட்டில் எங்கெல்லாம் தலித்துகளுக்கு எதிராகக் கொடுமைகள் நடக்குமோ, அங்கெல்லாம் காங்கிரஸ் இருக்கும், நாங்கள் அனைத்து உதவிகளையும் செய்வோம், நீதிக்காகப் போராடுவோம்." என்று தெரிவித்தார்.

# சத்தீஸ்கரில் 208 நக்சலைட்டுகள் சரண்

**சத்தீஸ்கர், அக். 18-**

208 நக்சலைட்டுகள் ஆயுதங்களை போலீசாரிடம் ஒப்படைத்து சரண் அடைந்தனர்.

நாடு முழுவதும் மார்ச் 2026க்குள் நக்சலைட்டுகளை முற்றிலும் ஒழித்துக்கட்ட மத்திய அரசு தீவிரம் காட்டி வருகிறது. நக்சலைட்டுகள் அதிக நடமாட்டம் உள்ள சத்தீஸ்கர் மாநிலத்தில் சமீபகாலமாக அவர்களின் தாக்குதலை பாதுகாப்பு படையினர் முறியடித்து வருகின்றனர். உயர்மட்ட தலைவர்கள் உள்ளிட்ட பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து தலைமறைவாக இருக்கும் நக்சலைட்டுகள் போலீசில் சரண் அடைந்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக நேற்று சத்தீஸ்கர் மாநிலம் ஜத்தல்பூரில் நக்சலைட்டுகள் 208 பேர் போலீசாரிடம் சரண் அடைந்தனர். அவர்கள் துப்பாக்கிகள் உள்ளிட்ட 153 ஆயுதங்களை போலீசாரிடம் ஒப்படைத்தனர். இதன் மூலம் அபுஜ்மத்தின் பெரும்பகுதி நக்சலைட்டுகள் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டு உள்ளது.

கடந்த 22 மாதங்களில் சத்தீஸ்கரில் 477 நக்சலைட்டுகள் கொல்லப்பட்டனர். 2,110 பேர் சரணடைந்தனர். 1,785 பேர் கைது செய்யப்பட்டனர் என்று முதலமைச்சர் எடுத்துரைத்தார். என்று பா.ஜ.க.வை சேர்ந்த அம்மாநில முதல்வர் விஷ்ணு தியோ சாய் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வடகிழக்கு பருவமழை தீவிரம்:
# தமிழ்நாடு முழுவதும் கனமழைக்கு வாய்ப்பு

**சென்னை, அக். 18-**

வடகிழக்கு பருவமழை தமிழகம் முழுவதும் கனமழைக்கு வாய்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை நேற்று முன்தினம் தொடங்கியுள்ளது. முதல் நாளே சென்னை உள்பட பல இடங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலையில் 30 நிமிடங்களுக்கும் மேலாக மழை கொட்டி தீர்த்தது. இரவிலும் விட்டு விட்டு பெய்த மழை காலையிலும் நீடித்தது.

இந்த நிலையில் அரபிக் கடல் மற்றும் வங்கக்கடலில் அடுத்தடுத்து 2 காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு பகுதிகளால் வடகிழக்கு பருவ மழை எப்படி இருக்கும்? எப்போது தீவிரமடையும்? என்பது பற்றி தனியார் வானிலை ஆய்வாளரான ஹேமச்சந்திரன் விளக்கி உள்ளார்.


அரபிக்கடல் மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் கேரளம், தெற்கு கர்நாடக பகுதியில் இன்று (18-ந்தேதி) உருவாகும் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் தமிழகத்தில் பெரிய அளவில் மழைப் பொழிவு இருக்காது. சென்னை உள்பட பல இடங்களில் பெய்து வரும் மழை இன்று முதல் சற்று குறையவே வாய்ப்புகள் உள்ளன. இதனால் வருகிற 19, 20 ஆகிய தேதிகளில் பெரிய அளவில் மழை இருக்காது. தீபாவளிக்கு பிறகு, வருகிற 24-ந்தேதி வங்கக்கடலில் உருவாக உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் வடகிழக்கு பருவமழை தீவிரமடைய வாய்ப்புள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வடமேற்கு திசையில் நகர்ந்து வலுப்பெறக் கூடும். இதனால் 23-ந்தேதியில் இருந்தே வடகிழக்கு பருவமழை தீவிரமடைவதற்கான சூழல் உள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி எந்த மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை 23-ந்தேதியே முழுமையாக கணிக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

இருப்பினும் வங்கக்கடலில் உருவாகும் இந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் வடகடலோர மாவட்டங்களில் 23-ந்தேதியில் இருந்து பலத்த மழை பெய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாக வானிலை ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

**18-10-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** இன்றைய செயல்பாடுகள் அனைத்திலும் தொய்வு உண்டாகும். எதிர்பார்த்த அரசு உதவிகள் மற்றும் வங்கிக் கடன்கள் மிகுந்த பிரயாசைக்குப் பிறகு கிடைக்கும். குழந்தைகளுக்கு உடல் உபாதைகள் ஏற்படலாம்.

**ரிஷபம்:-** தாய் சொல்லைத் தட்டாதீர். அவரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பணிவுத்தன்மை இல்லையெனில் அதிகாரிகளுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். தொழிலில் கொடுக்கல் வாங்கல் ஓரளவே சிறப்பாக அமையும்.

**மிதுனம்:-** சிங்கம் போல ஸ்டிரேங்க்த் எனக்கு என தைரியம் கூடும். மனதில் தெம்பு, தெளிவும் நிலைத்திருக்கும். பொதுநல வாழ்க்கையில், சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்படலாம். பயணங்களில் ஆர்வம் ஏற்படும்.

**கடகம்:-** மனைவி, குழந்தைகள் ஆரோக்கியக் குறைவு மருத்துவச் செலவை தரும். எடுத்த காரியங்கள் தோல்வி அடைவதைக் கண்டு துவண்டு விடாதீர்கள். தோல்வியே வெற்றிக்கு முதல் படி ஆகும்.

**சிம்மம்:-** எதிர்பாராத இடங்களிலிருந்து பல வழிகளிலும் பணவரவு ஏற்படும். தொழிலில் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். பெரியவர்கள், நண்பர்கள் சந்திப்பில் முன்னேற்றங்கள் ஏற்படும்.

**கன்னி:-** இடமாற்றங்கள் ஏற்படலாம். பெண்களால் ஏற்படும் வரவுக்கு மிஞ்சிய செலவுகள் பணமுடை ஏற்படும். கோபத்தைக் குறைத்தால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும்.

**துலாம்:-** பெற்றோர்களால் நன்மை ஏற்படும். குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். உல்லாசப் பயணங்கள் சந்தோஷம் நிலவும்.

**விருச்சிகம்:-** சந்தோஷ அனுபவங்கள் கூடும். குழந்தைகளின் திறமை கண்டு மகிழ்வார்கள். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். தீர்த்த யாத்திரைகள் திருப்தி தரும்.

**தனுசு:-** தெய்வீக சிந்தனைகள் அதிகரிப்பதன் காரணமாக குடும்பத்துடன் வேண்டுதல்களை நிறைவேற்ற முயல்வீர்கள். வாழ்க்கையில் பல நல்ல திருப்பங்களை எதிர்பார்க்கலாம்.

**மகரம்:-** மனதில் ஒரு நிம்மதி அற்ற நிலை இருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் இருக்காது. மனைவியின் வாய் துடுக்கு காரணமாக மற்றவர்களுடன் பகை ஏற்படும்.

**கும்பம்:-** ஆரோக்கிய நிலை மேம்படும். தொழில் புரிபவர்களுக்கு பேச்சே மூலதனமாய் அமையும். வாழ்க்கையில் முக்கிய திருப்பங்கள் ஏற்படும். சிலர் காதல் வயப்பட நேரும்.

**மீனம்:-** தனவரவு கூடும். திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். கல்வியில் சிறப்பு அடைவர். நண்பர்களால் உதவி உண்டு. சொந்த வீடு, நிலம் அமையும். பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும்.

# தினமும் ஆயிரம் மூட்டைகளை கொள்முதல் செய்ய வேண்டும்

## சட்டசபையில் இ.பி.எஸ். வலியுறுத்தல்

**சென்னை, அக். 18-**

நெல்கொள்முதல் நிலையங்களில் தினமும் ஆயிரம் மூட்டைகள் கொள்முதல் செய்யவேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

சட்டசபையில் எதிர்க் கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, நெல் கொள்முதல் நிலையங்களில் ஒரு லட்சம் நெல் மூட்டைகள் தேங்கி கிடக்கின்றன என்று குற்றம்சாட்டினார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட



15 லட்சம் நெல் மூட்டைகள் திருவாரூரில் கிடங்கில் இருக்கின்றன. 15 லட்சம் மூட்டைகளை குடோனுக்கு கொண்டு சென்றபிறகே மீண்டும் நெல் கொள்முதல் நிலையங்களில் மூட்டைகளை அடுக்கலாம். டெல்டா மாவட்டங்களில் போதுமான நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை. ஒவ்வொரு நிலையங்களிலும் 600 மூட்டைகள் மட்டுமே நாள் ஒன்றுக்கு கொள்முதல் செய்யப்படுகிறது. நெல் கொள்முதல் நிலையங்களில் தினமும் 600 மூட்டைகளுக்கு பதிலாக 1,000 மூட்டைகளை கொள்முதல் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழக சட்டசபையில்

# அமைச்சர் துரைமுருகனுடன் வேல்முருகன் வாக்குவாதம்

**சென்னை, அக். 18-**

சட்டசபையில் அமைச்சர் துரைமுருகனுடன் வேல்முருகன் எம்.எல்.ஏ. வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

தமிழக சட்டசபையில் நேற்று கேள்வி நேரத்தின்போது பண்ருட்டி தொகுதி உறுப்பினர் தி.வேல்முருகன் பேசினார். அவர் பேசும்போது, "அந்தியூர் பவானி ஒரு பகுதி மக்களுக்கு விவசாயம் செய்ய நீர் கிடைக்கவில்லை. அதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

அதற்கு பதில் அளித்த நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அந்தியூர் பிரச்சினையை பற்றி பேச அந்த தொகுதி உறுப்பினர் இருக்கிறார் என்று பதில் அளித்தார். அமைச்சர் துரைமுருகன் இவ்வாறு கூறியதால் கடும் கோபம் அடைந்த வேல்முருகன், அவருடைய பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால், சபாநாயகர் அப்பாவு, அவருக்கு தொடர்ந்து பேச அனுமதி அளிக்கவில்லை. இதனால், அவையில் பரபரப்பு ஏற்பட்டது. தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவரான வேல்முருகன் தற்போது தி.மு.க. கூட்டணியில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# குஜராத் துணை முதல்வராக ஹர்ஷ் சிங்வி பதவியேற்பு

## 25 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர்



**அகமதாபாத், அக். 18-**

குஜராத் துணை முதல்வராக ஹர்ஷ் சிங்வி பதவியேற்றார். அவருடன் மேலும், 25 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

குஜராத் முதல்வர் பூபேந்திர படேல் தலைமையிலான அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த அமைச்சர்கள் அனைவரும் நேற்று முன்தினம் திடீரென ராஜினாமா செய்தனர். இதையடுத்து, நேற்று முன்தினம் ஆளுநர் ஆச்சார்ய தேவ்விரத்தைச் சந்தித்த முதல்வர் பூபேந்திர படேல், புதிய அமைச்சரவையை அமைக்க உரிமை கோரினார். அவரது கோரிக்கை ஏற்கப்பட்டதை அடுத்து, புதிய அமைச்சரவை நேற்று பதவியேற்றது. இதில் சூரத்தைச் சேர்ந்த, குஜராத்தின் முன்னாள் உள்துறை அமைச்சரான ஹர்ஷ் சிங்வி, துணை முதல்வராக பதவியேற்றார். தற்போது அவருக்கு 40 வயது என்பதால், குஜராத்தின் துணை முதல்வராகப் பதவியேற்ற இளம் தலைவர் என்ற பெயரை பெற்றுள்ளார்.

அமைச்சரவை மாற்றத்தில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சமாக, கிரிக்கெட் வீரர் ரவீந்திர ஜடேஜாவின் மனைவி ரிவாபா ஜடேஜா அமைச்சராக பதவியேற்றுள்ளார். ஸ்வரூப் தாக்கூர், பிரவின்பாய் மாலி, ருஷிகேஷ் படேல், தர்ஷ்னா வகேலா, குன்வர்ஜி பவாலியா, அர்ஜூன் மோத்வாடியா, பர்ஷோத்தம் சோலங்கி, ஜிதேந்திர வகானி, பிரஃபுல் பன்ஷேரியா, கனு தேசாய் உள்ளிட்ட பலர் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர்.

புதிதாக அமைச்சராக பதவியேற்றவர்களில் 7 பேர் படிதார் சமூகத்தையும், 8 பேர் ஓபிசி பிரிவையும், 3 பேர் எஸ்சி பிரிவையும், 4 பேர் எஸ்டி பிரிவையும் சேர்ந்தவர்கள். மூன்று பெண்கள் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர். புதிய அமைச்சரவையில் 8 பேர் கேபினெட் அமைச்சர்களாகவும், 2 பேர் தனிப்பொறுப்புடன் கூடிய இணை அமைச்சர்களாகவும், 6 பேர் இணை அமைச்சர்களாகவும் பதவியேற்றுள்ளனர்.

குஜராத்தில் 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 182 தொகுதிகளில் 162 இடங்களில் வெற்றி பெற்று அறுதிப் பெரும்பான்மையுடன் பா.ஜ.க. ஆட்சி செய்து வருகிறது. இங்கு பிரதான எதிர்க்கட்சியான காங்கிரசுக்கு 12 எம்.எல்.ஏ.க்கள் மட்டுமே உள்ளனர். குஜராத்தின் அடுத்த சட்டப்பேரவைத் தேர்தல் 2027ம் ஆண்டு நடைபெற உள்ளது. சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு வருடங்கள் உள்ள நிலையில், திடீர் திருப்பமாக அமைச்சரவை மாற்றம் நிகழ்ந்துள்ளது. குஜராத்தில் இன்னும் சில மாதங்களில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் இந்த மாற்றம் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

# ஊழல் குற்றச்சாட்டில் பஞ்சாப் டி.ஐ.ஜி. கைது: ரூ.5 கோடி ரொக்கம் பறிமுதல்

**சண்டிகர், அக். 18-**

ஊழல் குற்றச்சாட்டில் பஞ்சாப் டி.ஐ.ஜி. ஹர்சரண் சிங் புல்லரை கைது செய்துள்ள சி.பி.ஐ., அவரிடம் இருந்து ரூ. 5 கோடி பணம், இரண்டு ஆடம்பர கார்கள், 1.5 கிலோ தங்க நகைகள் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்துள்ளது.



இது தொடர்பாக சி.பி.ஐ. வெளியிட்டுள்ள அறிக்கையில், லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டின் கீழ் 2009 பேட்ச்-ஐ சார்ந்த ஐபிஎஸ் அதிகாரி ஹர்சரண் சிங் புல்லர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். தற்போது அவர் பஞ்சாப் காவல்துறையில் டிஐஜி. பொறுப்பில் இருக்கிறார். ரூ. 8 லட்சம் லஞ்சம் வாங்கிய வழக்கில் தனி நபர் ஒருவருடன் சேர்த்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொழில் நடத்தும் ஒருவரிடம், அந்த தனி நபர் ஹர்சரண் சிங் புல்லர் சார்பாக அந்த லஞ்சப் பணத்தைப் பெற்றபோது அவர் கையும் களவுமாகப் பிடிபட்டார். லஞ்சம் கொடுத்தவர் ஏற்கெனவே கொடுத்த புகாரின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

புகார்தாரருக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை தான் தீர்த்து வைப்பதாகவும், அவரது தொழிலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்த நடவடிக்கையும் காவல்துறை எடுக்காமல் பார்த்துக்கொள்வதாகவும் பதிலுக்கு இடைத்தரகர் மூலம் மாதம்தோறும் ரூ. 8 லட்சம் லஞ்சமாகக் கொடுக்க வேண்டும் என்றும் ஹர்சரண் சிங் புல்லர் கூறியுள்ளார். ஹர்சரண் சிங் புல்லர் தொடர்புடைய பஞ்சாப் மற்றும் சண்டிகரில் உள்ள பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில் தோராயமாக ரூ. 5 கோடி பணம், 1.5 கிலோ தங்க நகைகள், இரண்டு சொகுசு வாகனங்கள், 22 ஆடம்பர கைக்கடிகாரங்கள், 40 லிட்டர் இறக்குமதி செய்யப்பட்ட மதுபானம், துப்பாக்கிகள், வெடிமருந்துகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டன. குற்றவாளிகள் இருவரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். தொடர்ந்து தேடுதல் பணிகளும் விசாரணைகளும் நடத்தப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இருமல் மருந்து விவகாரம்:

# இ.பி.எஸ். கொண்டு வந்த தீர்மானத்திற்கு அமைச்சர் மா. சுப்பிரமணியன் விளக்கம்

**சென்னை, அக். 18-**

கோல்ட்ரிப் இருமல் மருந்து தயாரிப்பு நிறுவனம் தொடங்கப்பட்ட 2011-ம் ஆண்டில் இருந்து ஒருமுறை கூட மத்திய மருந்து கட்டுப்பாட்டுத்துறை ஆய்வு செய்யவில்லை" என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி இருமல் மருந்து விவகாரம் தொடர்பாக கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவந்தார். அதற்கு பதிலளித்து பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன், "கடந்த அக்டோபர் மாதம் 1-ம் தேதி பிற்பகல் 3.30 மணியளவில் மத்தியப்பிரதேச மாநில மருந்து கட்டுப்பாட்டுத் துறையிடம் இருந்து தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டு துறைக்கு ஒரு கடிதம் பெறப்பட்டது.

அக்கடிதத்தில் செப்.4 முதல் மத்தியபிரதேச மாநிலம் சிந்த்வாரா மாவட்டத்தில் ஏற்பட்ட குழந்தைகள் மரணத்திற்கு தொடர்புடையதாக கருதப்படும் மருந்து கோல்ட்ரிப் சிரப் (பாராசிட்டமால், பினைல் ப்ரைன் ஹைட்ரோகுளோரைடு, குளோரிபெனிரளமன் மெலேட் சிரப்) குறித்த விவரம் பெறப்பட்டது.

இது தொடர்பாக, அக்.,1-ம் தேதி விடுமுறை தினமாக இருந்தாலும், அன்றைய தினமே சமார் 4.00 மணியளவில் துணை மருந்து கட்டுப்பாட்டு இயக்குநரின் உத்தரவின் பேரில் முதுநிலை மருந்துகள் ஆய்வாளர் தலைமையிலா குழு ஸ்ரீசன் பர்மசியூட்டிகள் நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்டன. மேலும் அக்.10-ம் தேதி தமிழ்நாடு முழுவதும் சந்தேகத்திற்குரிய கோல்ட்ரிப் சிரப் விற்பனை மாநிலம் முழுவதும் தடை செய்யப்பட்டது.

அக்குழு அக்., 1, 2 ஆம் தேதி மேற்கொண்ட தொடர் ஆய்வில் மருந்துகள் விதிகள், 1945-ன் கீழ் விதிமீறல்கள் கண்டறியப்பட்டு, சர்ச்சைக்குரிய மருந்து உள்ளிட்ட 5 மருந்துகள் அவசர பகுப்பாய்வு எடுக்கப்பட்டு அரசு மருத்துகள் பகுப்பாய்வு கூடம், சென்னைக்கு அனுப்பப்பட்டது.

பகுப்பாய்வின் முடிவில் டைஎதிலீன் கிளைகால் என்ற உயிர்க்கொல்லி நச்சு வேதிப்பொருள் கோல்ட்ரிப் சிரப்பில் 48.6 சதவீதம் இருப்பதாக அக்., 2 அன்று கண்டறியப்பட்டது.

மேலும் மேற்கூறிய நிறுவனத்திலிருந்து ஒடிசா மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கு கோல்ட்ரிப் மருந்து விநியோகிக்கப்பட்ட தகவல் கிடைக்கப்பட்ட விவரம் பெறப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கும் இதுதொடர்பான தகவல்கள் அக். 2-ம் தேதி மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. சர்ச்சைக்குரிய மருந்தை பற்றிய விவரங்கள் எல்லா மருந்துகள் ஆய்வர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு, அக். 2 அன்று கோல்ட்ரிப் சிரப் முடக்கம் செய்யப்பட்டது. பின்னர் ஸ்ரீசன் பார்மசூட்டிகள் தயாரித்த அனைத்து மருந்துகளும் முடக்கம் செய்யப்பட்டன.

மேலும் அக்., 3-ம் தேதி இம்மருந்து குறித்த எச்சரிக்கையும் பொதுமக்களுக்கு விடுக்கப்பட்டது.

ம.பி.யில் இருமல் மருந்துக்கு முதல் குழந்தை உயிரிழந்த 25 நாட்களுக்குப் பிறகு தான் தமிழ்நாட்டுக்குத் தகவல் தெரிவித்தனர். 48 மணி நேரத்தில் அரசு நடவடிக்கை எடுத்து, அந்நிறுவனத் தயாரிப்பு 126 மருந்துகளும் தடை செய்யப்பட்டன. இருமல் மருந்து நிறுவனத்துக்கு கடந்த 2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில்தான் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. மத்திய பிரதேச அரசும் இந்த மருந்து நல்ல மருந்து எனச் சான்றிதழ் தந்திருக்கிறது. தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கைகளை மத்திய மருந்து கட்டுப்பாட்டுத் துறை செய்திருக்க வேண்டும். கோல்ட்ரிப் இருமல் மருந்து தயாரிப்பு நிறுவனம் தொடங்கப்பட்ட 2011-ம் ஆண்டில் இருந்து ஒருமுறை கூட மத்திய மருந்து கட்டுப்பாட்டுத்துறை ஆய்வு செய்யவில்லை. 2019 முதல் 2022-ம் ஆண்டு வரை 5 முறை மாநில அரசின் மருந்து கட்டுப்பாட்டுத்துறை ஆய்வு செய்து அபராதமும், உற்பத்தி நிறுத்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டது எனினும், கடந்த ஆண்டில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளாததால் 2 அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சட்டசபை தேர்தல்: புதிய திருப்பமாக

# அன்புமணி ராமதாசுடன் பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் சந்திப்பு

**சென்னை, அக். 18-**

அரசியலில் திடீர் திருப்பமாக அன்புமணி ராமதாசுடன் பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் சந்தித்து பேசினார்.



தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலைச் சந்திக்க அனைத்துக் கட்சிகளும் ஆயத்தமாகி வருகின்றன. தற்போது கூட்டணி கணக்குகளில் கட்சிகள் கவனம் செலுத்தி வருகின்றன.

அ.தி.மு.க.-பா.ஜ.க. இடையே கூட்டணி மீண்டும் மலர்ந்துள்ளது. இந்தக் கூட்டணியில் மேலும் சில கட்சிகளை இணைக்க பா.ஜ.க. விரும்புகிறது. அதற்கான முயற்சிகளையும் பா.ஜ.க. முன்னெடுத்து வருகிறது. இந்நிலையில், பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாசை பனையூரில் உள்ள இல்லத்தில் பா.ஜ.க.வின் தேசிய துணை தலைவரும், தமிழக சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளருமான வைஜயந்த் பாண்டா எம்.பி. நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

அப்போது அவர், டாக்டர் அன்புமணி ராமதாசிடம் சட்டமன்ற தேர்தல் கூட்டணி தொடர்பாக பேசியதாகத் தெரிகிறது. அ.தி.மு.க.-பா.ஜ.க கூட்டணியில் பா.ம.க. இணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்ததாகவும் கூறப்படுகிறது. டாக்டர் அன்புமணி ராமதாசை பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் சந்தித்துப் பேசியது அரசியலில் திடீர் திருப்பமாக அமைந்துள்ளது.

# த.வெ.க. அங்கீகரிக்கப்பட்ட கட்சி அல்ல: நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தகவல்

**சென்னை, அக். 18-**

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சி அல்ல என இந்திய தேர்தல் ஆணையம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞர் செல்வகுமார் என்பவர் தாக்கல் செய்த மனுவில், கரூரில் தமிழக வெற்றிக் கழகம் கட்சித் தலைவர் விஜய் பிரச்சாரத்தின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் என 41 பேர் பலியாகியுள்ளனர். அரசியல் கட்சிகளின் கூட்டங்களுக்கு பெண்கள், குழந்தைகள் என கூட்டம் கூட்டுவது மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், தேர்தல் நடத்தை விதிகளுக்கு முரணானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதை தடை செய்து மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சட்டவிதிகளை மீறும் அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்ய மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்யலாம் என உச்ச நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் உத்தரவிட்டுள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விஜய் மற்றும் தவெகவினரின் அஜாக்கிரதையாலும், முறையான திட்டமிடல் இல்லாததாலும் கரூரில் நெரிசல் சம்பவம் ஏற்பட்டு, உயிர் பலி நேர்ந்துள்ளது. ஆனால் இந்த சம்பவம் தொடர்பான வழக்கில் விஜய் பெயரை சேர்க்காமல், குற்றம் சாட்டப்பட்டவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து எளிதில் தப்பிக்கும் வகையில் சாதாரண பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கு முடியும் வரை எந்த அரசியல் கட்சிக்கும் ரோடு ஷோ, கூட்டங்கள் நடத்த அனுமதிக்க கூடாது என டி.ஜி.பி.க்கு உத்தரவிட வேண்டும்; அரசியல் கட்சிகளின் கூட்டங்களில் பெண்கள், குழந்தைகளை ஈடுபடுத்த தடை விதிக்கும் மக்கள் பிரதிநிதித்துவ சட்ட விதிகளை கண்டிப்புடன் பின்பற்ற உத்தரவிட வேண்டும்; இந்த விதிகளை மீறிய தவெகவின் அங்கீகாரத்தை ரத்து செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், கரூர் சம்பவம் தொடர்பாக விஜய் மற்றும் தவெகவினர் மீது சிறார் நீதி சட்டம், குழந்தை தொழிலாளர்கள் தடைச் சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட வேண்டும்; உயிரிழந்தவர்களுக்கு குறைந்தது தலா ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்க தவெக தலைவர் விஜய்-க்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எம்எம் ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி அருள்முருகன் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்த போது, தமிழக வெற்றி கழகம் கட்சி அங்கீகரிக்கப்படாத கட்சி என்பதால் அந்தக் கட்சியின் அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுப்ப முடியாது என தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, மனுவுக்கு பதில் அளிக்கும்படி தமிழக அரசுக்கும் டிஜிபிக்கும் உத்தரவிட்ட நீதிபதிகள், மனுவில் எழுப்பப்பட்டுள்ள சில கோரிக்கைகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குடன் தொடர்புடையதாகவும், சில கோரிக்கைகள் வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது தொடர்பாக உள்ளதாலும், உச்ச நீதின்றத்தின் உத்தரவின் அடிப்படையில் வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது தொடர்பான வழக்கை விசாரிக்க அமைக்கப்பட உள்ள சிறப்பு அமர்வு முன்பு இந்த மனுவை விசாரணைக்கு பட்டியலிட வேண்டும் என உத்தரவிட்டனர். மேலும், கரூர் துயர சம்பவத்தை சுட்டிக்காட்டி அரசியல் கட்சிகளின் ரோட் ஷோ நிகழ்ச்சிகளுக்கு வழிகாட்டு விதிமுறைகள் வகுக்கக் கோரிய அனைத்து வழக்குகளையும் ஒரே அமர்வு விசாரிக்கும் என்றும் தலைமை நீதிபதி அமர்வு தெரிவித்துள்ளது.

## எனக்கு பாம்பு காது:

# சபாநாயகரின் பேச்சால் சட்டசபையில் சிரிப்பலை

**சென்னை, அக். 18-**

எனக்கு பாம்பு காது என்ற சபாநாயகரின் பேச்சு சட்டசபையில் சிரிப்பலையை ஏற்படுத்தியது.

தமிழக சட்டசபை கூட்டம் நேற்று நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அ.தி.மு.க. உறுப்பினர்கள் சிலர் நாம் கூப்பிட்டது சபாநாயகருக்கு கேட்கவில்லை என்று தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது சபாநாயகர் அப்பாவு அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் இருக்கும் திசையை நோக்கி பார்த்தபடியே எனக்கு கேட்கவில்லை என்று நீங்கள் கூறியது எனக்கு கேட்டது. எனக்கு பாம்பு காது என்றார். இது அவையில் சட்டசபையில் சிரிப்பலையை ஏற்படுத்தியது.

## அ.தி.மு.க.வை திருட்டுக்கடை போல் மாற்றிவிட்டார்:

# இ.பி.எஸ். மீது அமைச்சர் சிவசங்கர் தாக்கு

**சென்னை, அக். 18-**

அ.தி.மு.க.வை திருட்டுக்கடை போல் எடப்பாடி பழனிசாமி மாற்றிவிட்டார் என அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

தி.மு.க.வை உருட்டுக்கடை அல்வா என்று எடப்பாடி பழனிசாமி விமர்சித்த நிலையில் அமைச்சர் சிவசங்கர் பதிலடி கொடுத்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

எடப்பாடி பழனிசாமியின் சேர்க்கை சரியில்லாததால் வாய்க்கு வந்ததை பேசுகிறார். திராவிட மாடல் அரசின் திட்டங்கள் அனைத்து மக்களையும் சென்றடைகிறது. அ.தி.மு.க.வை திருட்டுக்கடை போல் எடப்பாடி பழனிசாமி மாற்றிவிட்டார்.

ஐவர் அணியாக இருந்த அ.தி.மு.க. தற்போது இருவர் அணியாக உள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு செல்போன் தருவதாக கூறினார்கள், அதனை நிறைவேற்றினார்களா? அ.தி.மு.க. தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டதா? எனவும் அமைச்சர் சிவசங்கர் கேள்வி எழுப்பியுள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஜி.டி.நாயுடு பாலத்தில் விபத்துகளை தடுக்க நடவடிக்கை: அமைச்சர் உறுதி

**சென்னை, அக். 18-**

ஜி.டி.நாயுடு புதிய மேம்பாலம் பகுதியில் விபத்துகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் வினாக்கள் விடைகள் நேரத்தில், பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன், கோவையில் தொடங்கப்பட்டுள்ள பாலத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும் நிலையில் அதனை சீரமைக்க மாநில அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை வைத்தார். அதற்கு பதிலளித்து பேசிய அமைச்சர் எ.வ.வேலு, கோவையில் பாலம் அமைந்துள்ள இடத்தில் நீண்ட நாட்களாக பாலம் திறக்கப்பட வேண்டும் என்று பொதுமக்களின் கோரிக்கையை தொடர்ந்து 10.10 கிலோமீட்டர் நீளத்திற்கு பாலம் கட்டப்பட்டுள்ளது. தென்னகத்தின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோவையில் உள்ள தொழில் அதிபர்களின் கோரிக்கையை தொடர்ந்து அந்த ஊரை சேர்ந்த விஞ்ஞானி ஜி. டி. நாயுடுவின் பெயர் அந்த பாலத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

அங்கு உப்பிலிபாளையம் பகுதியில் விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால், அங்குள்ள ரவுண்டானா பகுதியில் சாலை பாதுகாப்பு அதிகாரிகள் ஆய்வு செய்துள்ளனர்.

அங்கு விபத்துகள் ஏற்படாமல் இருக்க கோரிக்கை வருகிறது. அதே போல பாலம் கட்டப்பட்ட பிறகு விமானநிலையத்தில் இருந்து வரும் வாகனங்கள் வேகமாக செல்வதால் விபத்துகள் ஏற்படலாம் என்று கூறியதால் அங்கு ரப்பர் வேக தடை அமைக்கப்பட உள்ளதோடு, சிக்னல் அமைக்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



ஆணவக் கொலைகளைத் தடுக்க சட்டம் இயற்ற தமிழ்நாடு அரசு கொள்கை முடிவெடுத்திருப்பதை வி.சி.க. வரவேற்கிறது. நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் ஆணையம் அமைத்து அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் சட்டமியற்றப்படுமென சட்டப்பேரவையில் முதல்வர் அறிவித்திருப்பதை பாராட்டுகிறோம்.

**- திருமாவளவன்**



நிலமில்லா ஏழைகளுக்கு நிலம் பகிர்ந்து அளிக்கப்படும் இந்த காலத்தில், அரசு விவசாய நிலங்களை கையகப்படுத்தி விவசாயிகளின் மறுவாழ்விற்கு எந்தவித மாற்று இடத்தை தராமல் இழப்பீடு மட்டுமே தர முன்வருவது ஏற்புடையது அல்ல. ஆகவே எச்சூர் கிராமத்தில் விளை நிலங்களை கையகப்படுத்தும் முடிவை அரசு கைவிட வேண்டும்.

**- ராமதாஸ்**



இந்தியா வளர்ந்து வரும் நாடு. அதில் தமிழ்நாடு வளர்ச்சி நோக்கி பயணித்து வருகிறது. இந்நிலையில், இன்னமும் இங்கு பலதரப்பு மக்கள் வாழ்வாதாரம் முன்னேறாமல் உள்ளது. அவர்களுக்கான திட்டங்களை அரசு அறிவித்து செயல்படுத்தலாம். ஆனால், இலவச திட்டங்கள் அதிகமாக உள்ளது. இதனை அரசியல்வாதிகள் சிந்திக்க வேண்டும்.

**- டி.டி.வி. தினகரன்**



பாலாறு உள்ளிட்ட ஆறுகளை இழந்து விட்டோம்; காவிரியில் பாதி உரிமையை இழந்து நிற்கிறோம். எனவே, முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட, தலைமை நீதிபதி பி. ஆர். கவாய் கருத்துக்கும், கட்டளைக்கும் சட்டத் தடுப்புகள் போட சட்டரீதியாக போராட்டத்தை அரசு தீவிரப்படுத்த வேண்டும்.

**- வேல்முருகன்**

## திருவொற்றியூர் மணலி மண்டல திமுகவினருக்கு தீபாவளி பரிசு மண்டல குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம் வழங்கினார்



**திருவொற்றியூர் அக்.18**


பெருநகர சென்னை மாநகராட்சி இரண்டாவது மண்டலமான மணலியில் மண்டல குழு தலைவரும் பகுதி கழகச் செயலாளருமான ஏ.வி.ஆறுமுகம் தனது வட்ட வாக்காளர்களுக்கும் திமுக நிர்வாகிகள் மற்றும் மண்டல குழு ஊழியர்கள் உட்பட 1000 பேருக்கு பட்டாசு இனிப்பு மற்றும் பண உதவி வழங்கினார். இந்த நிகழ்வில் வட்டசெயலாளர்கள் தச.கரிகாலச் சோழன் சாலைகணேசன் செல்வம்பகுதி துணைச் செயலாளர் தினகரன், ரமேஷ் குமார், துர்கா கோதண்டன் மாவட்ட பிரதிநிதிகள் சஞ்சீவி ஸ்ரீதர், செல்வராஜ் மற்றும்பாக ஒருங்கிணைப்பாளர்கள் முகவர்கள் மற்றும் மாவட்ட பகுதி வட்ட நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் தூய்மை பணியாளர்கள் சாலை பணியாளர்கள் மலேரியா பணியாளர்களுக்கு தீபாவளி தொகுப்பு வழங்கப்பட்டது.



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் அடுத்த பழவேரி ஊராட்சியில் மாணவ - மாணவிகள் மூலம் பனை விதைகள் நடும் நிகழ்ச்சியினை மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி துவக்கி வைத்தார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ( பொ ) நளினி மற்றும் அரசு அலுவலர்கள், கிராம மக்கள் உடனிருந்தார்.

## சென்னை விக்டோரியா பொது அரங்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணியினையும், புதிதாக கட்டப்படவுள்ள மன்றக் கூடத்திற்கான இடம்

### அமைச்சர் கே.என்.நேரு நேரில் ஆய்வு



**சென்னை,அக்.18**

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள விக்டோரியா பொது அரங்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைத்து மேம்படுத்தும் பணியினையும், புதிதாக கட்டப்படவுள்ள மன்றக் கூடத்திற்கான இடத்தினையும் (17.10.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். விக்டோரியா பொது அரங்கம் சென்னையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க கட்டடமாக திகழ்கின்றது. இக்கட்டடம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் பேரரசி விக்டோரியாவின் பெயரால் பெயரிடப்பட்ட சிறப்பு வாய்ந்த கட்டடமாகும். மேலும், சென்னை மாநகரின் கட்டடக் கலைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும், விக்டோரியா ராணி ஆட்சியின் பொன் விழாவை நினைவு கூறும் வகையிலும் அமைக்கப்பட்ட இக்கட்டடம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ராபர்ட் சிசோல்ம் என்பவரால் இந்தோ சாரசெனிக் கட்டடக்கலையில் நம்பெருமாள் செட்டியாரால் 1888ஆம் ஆண்டு இந்த அரங்கம் கட்டப்பட்டது.

வரலாற்று சிறப்புமிக்க, தொன்மை வாய்ந்த விக்டோரியா பொது அரங்கினை அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணியினை மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, நிதி ஒதுக்கீடு செய்தார்கள். அதனடிப்படையில், சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணியானது நடைபெற்று வருகிறது.இரண்டு தளம் கொண்ட இக்கட்டடத்தின் நீளம் 48 மீட்டர், அகலம் 24 மீட்டர், பிரதானக் கூரையின் உயரம் 19 மீட்டர் மற்றும் மொத்த கோபுரத்தின் உயரம் 34 மீட்டர் ஆகும். தற்பொழுது இந்த விக்டோரியா பொது அரங்கின் முழுக் கட்டடத்தையும் அதன் தொன்மை மாறாமல் பழுது பார்க்கும் பணிகள், நில அதிர்வினை தாங்கும் வகையில் மறுசீரமைப்பு பணிகள், முழு கூரையினையும் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், வெளிப்புறம் மற்றும் உட்புறம் மரத்தளம் மற்றும் மரப்படிக்கட்டுகளுடன் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், ஏற்கனவே உள்ள கட்டடத்தை தற்போதைய பயன்பாட்டிற்கு ஏற்றவாறு மேம்படுத்துதல் உள்ளிட்ட மறுசீரமைப்புப் பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

விக்டோரியா பொது அரங்கில் மேற்கொள்ளப்படும் பணிகள், கட்டடத்தின் உறுதித்தன்மை மாறாமல் மறுசீரமைப்பு செய்தல் உள்ளிட்ட விவரங்களை மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார். இப்பணிகளை இரண்டு வார காலத்திற்குள் முடித்திட அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்பி.கே.சேகர்பாபு மேயர் ஆர்.பிரியாதுணைமேயர்மு.மகேஷ்குமார் அவர்கள், ஆணையாளர்ஜெ.குமரகுருபரன், மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி உடனிருந்தனர்.

## லாரியில் ரகசிய அறை அமைத்து கடத்திய ரூ.2 கோடி கஞ்சா பறிமுதல்: டிரைவர் உள்பட 2 பேர் கைது

**சென்னை அக 18-**

ஆந்திராவில் இருந்து தமிழகத்திற்கு லாரியில் ரகசிய அறை அமைத்து, ரூ.2 கோடி மதிப்புள்ள 320 கிலோ கஞ்சா கடத்தி வந்த ஓட்டுநர் உள்பட 2 பேரை தேசிய போதை பொருள் கட்டுப்பாட்டு பணியக பிரிவு அதிகாரிகள் கைது செய்தனர். ஆந்திராவில் இருந்து தமிழகத்திற்கு அதிகளவில் கஞ்சா கடத்தி வருவதாக சென்னை மண்டல தேசிய போதை பொருள் கட்டுப்பாட்டு பணியகத்திற்கு ரகசிய தகவல் கிடைத்தது.அதன்பேரில், செங்குன்றம் நல்லூர் அருகே உள்ள காரனோடை சுங்கச்சாவடியில் தேசிய போதை பொருள் கட்டுப்பாட்டு பணியக அதிகாரிகள் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அவ்வழியே வந்த லாரி ஒன்றை மறித்து சோதனை செய்த போது, லாரியின் பாடியில் வழக்கத்திற்கு மாறாக ஒரு அடி உயரத்திற்கு பாடி கட்டமைப்பு இருந்தது. இதனால், அதிகாரிகள் லாரியின் பாடியை ஆய்வு செய்த போது, அதில் ரகசிய அறை ஏற்படுத்தி, அதில் 150 பொட்டலங்களாக 320 கிலோ கஞ்சா கடத்தி வந்தது தெரியவந்தது.உடனே லாரி ஓட்டுநர் உள்பட 2 பேரை பிடித்து விசாரணை நடத்தினர். அதில், கஞ்சா கடத்துவதற்காக லாரியில் பிரத்யேகமாக ரகசிய அறை ஏற்பாடு செய்து, கஞ்சா கடத்துவதற்காக லாரியின் பதிவு எண் மற்றும் பாஸ்ட்டேக் போலியாக தயாரித்து தமிழகத்தில் இருந்து ஆந்திரா சென்று அங்கிருந்து கஞ்சா கடத்தியதும், கடத்தலில் பெரிய கஞ்சா கும்பலுக்கு தொடர்பு இருப்பதும் தெரியவந்தது.பறிமுதல் செய்யப்பட்ட 320 கிலோ கஞ்சாவின் மதிப்பு ரூ.2 கோடி என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து கடத்தலுக்கு பயன்படுத்திய லாரி மற்றும் கஞ்சாவை அதிகாரிகள் பறிமுதல் செய்த அதிகாரிகள், இருவரை கைது செய்து, இதில் தொடர்புடைவர்கள் குறித்து விசாரித்து வருகின்றனர்

## சென்னை எனும் குழந்தையை தினந்தோறும் சீராட்டும் தாய்மார்கள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நெகிழ்ச்சி




**சென்னை அக 18-**

தமிழ்நாடு துணை முதலமைச்சரும் திமுக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் சென்னை, எழும்பூர், வேப்பேரி பெரியார் திடலில் மேயர் ஆர்.பிரியா ஏற்பாட்டில் பேரிடர் காலங்களில் சிறப்பாக பணியாற்றிய 1,100 தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி பேசியதாவது : "சென்னை என்ற குழந்தையை தினமும் வேலைக்கு அனுப்பி, விளையாட அனுப்பி, அது விட்டுக்கு வந்தவுடன் குளிக்க வைக்கின்ற தாய்மார்கள் இங்கு வந்திருக்க கூடிய தூய்மைப் பணியாளர்களாகிய நீங்கள்தான். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந்த தூய்மைப் பணியாளர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில், எனக்கு மிகுந்த பெருமையை நான் தேடிக்கொள்கிறேன்."

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மிகுந்த பெருமையாகக் கருதுகிறேன். அதற்கு என்ன காரணம் என்றால், இது சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெறுகிற நிகழ்ச்சி என்பதால் மட்டுமல்ல, சமுதாயத்தில் தன் வாழ்நாள் முழுவதும் தூய்மைப் பணியில் ஈடுபட்ட தந்தை பெரியார் திடலில், தூய்மைப் பணியாளர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றமைக்குப் பெருமையாகக் கருதுகிறேன். நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்து என்னை அழைத்து வந்த சகோதரி, உங்களின் மேயர் பிரியா அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பல நிகழ்ச்சிகளை அவர் நடத்த வேண்டும். அண்ணன் சேகர்பாபு அவர்கள் பேசும்போது சொன்னார். இன்றைக்கு சகோதரி பிரியா அவர்கள் இந்த நிகழ்ச்சி மட்டுமல்ல, பரிசு கிடையாது இது எங்களின் கடமை, இது உங்களின் உரிமை. இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்து இரவு உணவு ஏற்பாடு செய்திருக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் இந்தத் தொகுதி முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து தூய்மைப் பணியாளர்களையும் வைத்து நிகழ்ச்சி நடத்த வேண்டும். பெருமைப்படுத்த வேண்டும் என்று சொன்னார். நான் அவரிடத்தில் சொல்லிக் கொள்வதெல்லாம் மேயர் பிரியா அவர்கள் இந்தத் தொகுதிக்கு மட்டும் மேயர் கிடையாது, ஒட்டுமொத்த சென்னை மாநகராட்சிக்கும் அவர் மேயர். சென்னை மாநகராட்சியில் இருக்கக்கூடிய அனைத்து தூய்மைப் பணியாளர்களையும் அழைத்து, என்னையும் அழைத்து இதேபோல பல நிகழ்ச்சிகளை அவர் நடத்த வேண்டும்.

உங்களின் பணி தூய்மைப் பணியாளர்களான உங்களின் பணி மிகவும் போற்றத்தக்கது. அதுவும் குறிப்பாக மழைக் காலங்களில், கோவிட் காலங்களில் உங்களின் உழைப்பு யாராலும் அளவிட முடியாதது. களத்தில் எங்கள் எல்லோருக்கும் முன், எங்களுக்கு தைரியம் சொல்லி களத்தில் இறங்கி தூய்மைப் பணியில் ஈடுபட்டவர்கள் நீங்கதான்.குறிப்பாக மழைக் காலங்களில் அண்ணன் சேகர்பாபு, நான், சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர் பிரியா நள்ளிரவு 2 மணி, 3 மணிக்கு அதிகமாக மழை பெய்கிறது. களத்துக்குச் சென்று, எங்கு தண்ணீர் தேங்கி நிற்கிறது என்று பார்ப்போம். அங்கு பணிகளை எல்லாம் முடுக்கி விடுவோம்னு என்று நினைத்து சென்று பார்த்தோம் என்றால், அங்கு எங்களுக்கு முன் களத்தில் பணிகளை மேற்கொள்ள ஆரம்பித்திருப்பது யார் என்று பார்த்தீர்கள் என்றால், இங்கு வந்திருக்கக்கூடிய தூய்மைப் பணியாளர்களான நீங்கள்தான்.மிகுந்த பெருமை நம் வீட்டில் ஒரு 5 வயது குழந்தை இருக்கிறது என்றால், காலையில் எழுந்து வீட்டில் இருக்காது.

அது விளையாட போய்விடும். அந்த அழுக்கிலும், மண்ணிலும் புரண்டு விளையாடிவிட்டு, திரும்பி வீட்டுக்கு வரும்போது அந்த குழந்தையின் தாய் எவ்வளவு கோபம் வந்தாலும் அந்தக் குழந்தையை அடிக்க மாட்டார்கள். முதலில் அந்தக் குழந்தையைக் குளிக்க வைப்பார்கள். அதுபோல சென்னை என்ற அந்தக் குழந்தையை தினமும் வேலைக்கு அனுப்பி, விளையாட அனுப்பி அது வீட்டுக்கு வந்தவுடன் குளிக்க வைக்கின்ற தாய்மார்கள் இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள்தான். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந்த தூய்மைப் பணியாளர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் எனக்கு மிகுந்த பெருமையை நான் தேடிக் கொள்கிறேன்.

எனவே இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும், சகோதரி பிரியா அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வந்திருக்கும் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்து விடைபெறுகிறேன். இவ்வாறு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி தெரிவித்தார்.

## எம்.ஜி.ஆர்.நகர் அருகே மின்சாரம் பாய்ந்து தனியார் நிறுவன ஊழியர் பலி

**சென்னை அக 18-.**

சென்னை எம்.ஜி.ஆர்.நகர் அருகே மின்சாரம் பாய்ந்து தனியார் நிறுவன ஊழியர் உயிரிழந்தார்.

சென்னை எம்.ஜி.ஆர்.நகர் சூளைப்பள்ளம் நேரு தெருவை சேர்ந்தவர் யுவராஜ் (41). இவர் டாடா ஸ்கை என்ற தனியார் நிறுவனத்தில் ஊழியராக பணியாற்றி வருகிறார். இவர் நெசப்பாக்கம் ஜெய் பாலாஜி அவென்யூ பகுதியில் உள்ள ஒரு வீட்டிற்கு தனது நிறுவனத்தின் டிஷ் ஆண்டெனா அமைக்கும் பணியில் நேற்று முன்தினம் ஈடுபட்டார். அப்போது எதிர்பாராத விதமாக கேபிள் ஒயர் அருகில் இருந்த மின்னழுத்த கம்பியில் உராசியது. இதில் ஊழியர் யுவராஜ் மீது மின்சாரம் பாய்ந்து தூக்கி வீசப்பட்டார். இதை பார்த்த சக ஊழியர்கள் யுவராஜை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தனியார் நிறுவனம் பெங்களூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் உதவியுடன் அழைத்து சென்றனர். ஆனால் செல்லும் வழியிலேயே யுவராஜுக்கு திடீரென மூச்சு திணறல் ஏற்பட்டது. உடனே ஒசூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு டாக்டர்கள் யுவராஜை பரிசோதனை செய்த போது அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். பின்னர் சம்பவம் குறித்து எம்ஜிஆர்.நகர் போலீசாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. அதன்படி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தீபாவளி பண்டிகையையொட்டி சென்னயில் 18,000 போலீசார் பாதுகாப்பு

**சென்னை அக்18-**

தீபாவளி பண்டிகையை ஒட்டி சென்னை மாநகரில் 18,000 போலீசார் பாதுகாப்பில் ஈடுபடவுள்ளனர். மக்கள் அதிகம் கூடும் தியாகராயர் நகர், புரசைவாக்கம் உள்ளிட்ட இடங்களில் சிறப்பு கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளது. பாண்டிபஜார், மயிலாப்பூர், புரசைவாக்கம் உள்ளிட்ட இடங்களில் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வண்ணாரப்பேட்டை, பூக்கடை, புரசைவாக்கம், தியாகராயர் நகரில் தற்காலிக உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் அதிகம் கூடும் இடங்களில் ஆம்புலன்ஸ் வாகனங்கள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

## பெண் கண்டெடுத்த சுமார் 6 சவரன் தங்கச்செயின் நேர்மையாக காவல் நிலையத்தில் ஒப்படைப்பு

**சென்னை அக18-**

வானகரம் பகுதியில் சாலையில் நடந்து சென்ற பெண் கண்டெடுத்த சுமார் 6 சவரன் தங்கச்செயினை நேர்மையாக காவல் நிலையத்தில் ஒப்படைத்ததன் பேரில் போலீசார் விசாரணை செய்து உரிமையாளரிடம் ஒப்படைத்தனர்.

சென்னை, அயனம்பாக்கம், ராஜகுப்பம் பகுதியில் சபிரா, என்பவர் வசித்து வருகிறார். இவர் கடந்த 14. தேதி அன்று மாலை அயனம்பாக்கம் பகுதியில் உள்ள பார்க்கில் நடந்து சென்று கொண்டிருந்த போது, சாலையில் கேட்பாரற்று கிடந்த சுமார் 6 சவரன் தங்கச்செயினை எடுத்து அருகில் உள்ளவர்களிடம் கேட்ட போது, யாரும் தங்களுடையது இல்லை என்று கூறியதால், சபிரா அவரது வீட்டின் அருகில் உள்ள வானகரம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

வானகரம் காவல் நிலைய போலீசார் விசாரணை செய்ததில் மேற்படி பெண் தங்க நகையை கண்டெடுத்தது ஆவடி காவல் ஆணையரகம், திருவேற்காடு காவல் நிலைய எல்லை என்பது தெரிந்து, திருவேற்காடு போலீசாரை தொடர்பு கொண்டபோது, வானகரம் பகுதியைச்சேர்ந்த பவானி என்பவர் மேற்படி பார்க்கில் நடைபயிற்சி செய்த போது, தங்கச்செயினை தவறவிட்டதும், அதன் பேரில் பவானியை வானகரம் காவல் நிலையத்திற்கு நேரில் அழைத்து திருவேற்காடு காவல் நிலைய போலீசார் முன்னிலையில் தங்க நகைகள் பத்திரமாக ஒப்படைக்கப்பட்டது.

## சென்னையில் பல்வேறு காவல் நிலையத்தில் தலைமறைவான 3 குற்றவாளி கைது

**சென்னை அக 18-**

குமரன் நகர் காவல் நிலையத்தில் தாக்கலான வழிப்பறி வழக்கில் தொடர்புடைய எதிரி ராகேஷ் என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் நீதிமன்ற பிணையில் சென்ற எதிரி ராகேஷ், சைதாப்பேட்டை, 23வது பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு தொடர்ச்சியாக ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் எதிரி ராகேஷ் மீது கடந்த 18.09.2025 அன்று பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததின்பேரில், காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, தலைமறைவாக இருந்த எதிரி ராகேஷ், என்பவரை கைது செய்தனர். இதேபோல, 2022ம் ஆண்டு, சூளைமேடு காவல் நிலையத்தில் தாக்கலான காய வழக்கில் தொடர்புடைய எதிரி சாலாவுதீன் (எ) சாலா என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் நீதிமன்ற பிணையில் சென்ற எதிரி சாலாவுதீன் (எ) சாலா, சைதாப்பேட்டை, 17வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால், எதிரி சாலாவுதீன் (எ) சாலா மீது 18.08.2025 அன்று பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததின் பேரில், காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, தலைமறைவாக இருந்த எதிரி சாலாவுதீன் (எ) சாலா, என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரிகள் ராகேஷ் மற்றும் சாலாவுதீன் ஆகிய இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைத்தனர்..

ஆம்புலன்சுக்கு வழிவிடுங்கள்

## ஆதம்பாக்கம் பகுதியில் வீட்டில் குளிர்சாதன இயந்திரத்தின் ஏ.சி அவுட்டோர் யூனிட்டை திருடிய 2 பேர் கைது

**சென்னை அக்18-**

சென்னை, ஆதம்பாக்கம், சுரேந்தர் நகர் பகுதியில் கட்டுமான தொழில் செய்து வரும் ஸ்டான்லி ராஜன், என்பவர் வசித்து வருகிறார்.

மேற்படி வீட்டில் கடந்த ஒரு மாதமாக பழுதடைந்த இடங்களை சரிபார்க்கும் கட்டுமான வேலைகள் நடந்து வருவதால், வீட்டின் வெளியே பொருத்தப்பட்டிருந்த குளிர் சாதன இயந்திரத்தின் கழற்றி வீட்டின் வராண்டாவில் வைத்துள்ளார்.

கடந்த 13.10.2025 அன்று மாலை பார்த்த போது ஏ.சி அவுட்டோர் யூனிட் ஐ யாரோ திருடிச்சென்றது தெரியவந்தது. இது குறித்து ஸ்டான்லி ராஜன் ஆதம்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்,

**தீவிர விசாரணை**

ஆதம்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற வழக்கில் தொடர்புடைய 1.மாதவன், 2.தனுஷ், ஆகிய 2 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து ஏ.சி அவுட்டோர் யூனிட் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் மாதவன் ஆதம்பாக்கம் காவல் நிலைய சரித்திரப்பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே 19 வழக்குகள் உள்ளதும், எதிரி தனுஷ் மீது 3 வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.



வடகிழக்கு பருவமழையினையொட்டி, சென்னை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தொடர்பாக சேவைத்துறை அலுவலர்களுடான ஆய்வு கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் நடந்தது. இதில் துணை மேயர் மகேஷ்குமார், ஆணையர் குமரகுருபரன், இணை ஆணையர் ஜெயசீலன், துணை ஆணையர்கள் சிவ கிருஷ்ணமூர்த்தி, பிரிதிவிராஜ், கட்டாரவி தேஜா, கவுசிக், அதாப் கலந்து கொண்டனர்.

# விவசாயம் தொடர்பான அனைத்து கோரிக்கைகளுக்கும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்

## குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு உறுதி





ஊட்டி, அக்.18-

விவசாயம் தொடர்பான அனைத்து கோரிக்கைகளுக்கும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என ஊட்டியில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கூறினார்.

நீலகிரி மாவட்ட கலெக்டர் கூடுதல் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நேற்று (17.10.2025 ) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

ஆப்பிரிக்கன் பன்றிக் காய்ச்சல் பரவுவதால் பன்றி வளர்க்கும் விவசாயிகளுக்கு ஃ நபர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும், பன்றிகளுக்கு காய்ச்சல், இரத்த கசிவு, சோர்வடைதல் போன்ற அறிகுறிகள் தெரிந்தால் உடனே கால்நடைத்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் எனவும், வணிக வரி துறையினர் ஜிஎஸ்டி வரியில் சில மாற்றங்கள் வந்ததை விவசாயிகளுக்கு எந்த வகையில் பயனுள்ளவையாக உள்ளது என்பதை விவசாயி வாட்ஸ்ஆப் குழு விலோஃ பேம்ப்லெட் மூலம் விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும், தெரு நாய்களின் தொல்லை அதிகமாக உள்ள நிலையில் ராமகிருஷ்ணமடம், எம்.பாலாடா, கூக்கல் தொரை பகுதிகளில் சுற்றியுள்ள உணவகம் மற்றும் தங்கும் விடுதிகளில் மீதமுள்ள உணவை பொது இடங்களில் கொட்டகூடாது என்றும் கொட்டினால் அபராதம் விதிக்க வேண்டும் எனவும் ஊட்டி நகராட்சி அலுவலர்களிடம் அறிவுரை வழங்கி, கால்நடைகளுக்கான தீவனங்கள், வளர்க்க உரிய இடம், இரகங்களுக்கேற்ற காலம்ஃ மாதம் மற்றும் இடத்திற்கேற்ப தீவனங்களின் விவரத்தினை தெரிவிக்க வேண்டும் எனவும், உயிரி வேலி அமைக்க எந்த தாவரங்கள் உகந்ததாக இருக்கும் என்ற விவரத்தினை சமர்ப்பிக்குமாறு கால்நடைதுறைக்கு அறிவுறுத்தினார்.

மேலும், விவசாயம் தொடர்பான அனைத்து கோரிக் கை க ளுக் கும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன், தோட்டக்கலை இணை இயக்குநர் எஸ். ஷிபிலாமேரி உட்பட அரசுத்துறை அலுவலர்கள், விவசாயயிகள் பலர் கலந்துக் கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் சோலூர் பேரூராட்சி செயல் அலுவலராக ஆனந்தக்குமார் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு அலுவலகபணியாளர்கள்,ஊர்பொதுமக்கள்வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் அமைந்துள்ள அருள்நெறி திருப்பணி மன்றம் பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமினை நாடாளுமன்ற உறுப்பினர் கே. இ பிரகாஷ் துவக்கி வைத்தார். உடன் ஈரோடு மண்டல பொருளாளர் ப.க.பழனிச்சாமி உள்ளார்.

குன்னூர் பகுதியில்

# மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிப்பு தீயணைப்புத் துறையினர் அகற்றினர்



ஊட்டி, அக்.18-

குன்னூரில் தொடரும் மழையால் ஒரே இடத்தில் 3 மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தீயணைப்புத் துறையினர் மரங்களை வெட்டி அகற்றினர்.

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை முடிந்து வடகிழக்கு பருவமழை நேற்று முன்தினம் முதல் தொடங்கி விட்டது. ஏற்கனவே கடந்த ஒரு வாரமாக நீலகிரியில் மழை தொடர்ந்து வருவதால், சாலைகளில் பாறைகள் விழுதல் மரங்கள் விழுதல் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக, நீலகிரி உள்பட பல்வேறு மாவட்டங்களில் மழை பாதிப்பு தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு வெளியிட்டது. இதன்படி நேற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்தது.

இதன் ஒரு பகுதியாக குன்னூர் அடுத்த அல் அக்கரை பகுதியில் இருந்து கோத்தகிரி செல்லும் சாலையில் ஒரே இடத்தில் மூன்று மரங்கள் விழுந்தது. இதன் காரணமாக இரு புறங்களிலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டு சாலையில் நீண்ட தூரத்துக்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றன. இதன் பின்னர் வாகனங்கள் வேறு வழியாக மாற்றி விடப்பட்டன.

இதுகுறித்து தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது நிலையை அலுவலர் குமார் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்திற்கு வந்து மூன்று மரங்களையும் வெட்டி அகற்றினர் இதன் பின்னர் படிப்படியாக அந்த பகுதியில் போக்குவரத்து சீரானது. மேலும் மாவட்டத்தில் கால நிலை மாறி குளிர் அதிகமாக இருப்பதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. கேரட் அறுவடை உள்ளிட்ட பணிகளுக்கு செல்லும் விவசாயிகள் விவசாய தொழிலாளர்கள் சிரமப்படுகின்றனர்.



ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் கலெக்டர் ச.கந்தசாமி ஆய்வு செய்தார்.

# யூத் ஹாஸ்டல்ஸ் மற்றும் ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரி என்.சி.சி. சார்பில் இயற்கை முகாம்



ஈரோடு அக் 18-

ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரி என்சிசி மற்றும் யூத் ஹாஸ்டல்ஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியா கொங்கு கிளையில் சார்பில் இயற்கை முகாம் மேஜர் டாக்டர். கவிதா தலைமையில் நடைபெற்றது. யூத் ஹாஸ்டல் கொங்கு கிளை செயலாளர் டாக்டர். ராஜா முன்னிலை வகித்தார்.

இந்த இயற்கை முகாமில் மலைவாழ் மக்கள் நல முகாம், மலை பயண பயிற்சி முகாம், கொங்காடை மலை கிராமத்தை கண்டு களித்தல் மற்றும் கொங்காடை மலை வாழ் மக்களுடன் சர்வே உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த முகாமிற்கு 50 மாணவிகள் தேர்வு செய்யப்பட்டனர். முன்னதாக மணியாச்சி யானை பள்ளத்தை மாணவிகள் கண்டு களித்தனர்.

பின்னர் சர்வதேச மாணவர்கள் தினத்தை முன்னிட்டு மலைவாழ் மக்கள் நல முகாம் கொங்காடை மலை வாழ் உண்டு உறைவிட பள்ளியில் நடைபெற்றது. பள்ளியின் தலைமை ஆசிரியர் சரவணன் தலைமை வகித்து தலைமை உரை ஆற்றினார். மேஜர் டாக்டர் கவிதா சிறப்புரை ஆற்றினார்.

பின்னர் ஆதித்யா சர்வதேச மாணவர் தின சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து அன்பு மணி சர்வதேச பெண் குழந்தை தின சிறப்பு உரையாற்றினார். இந்துமதி சர்வதேச உணவு தின சிறப்புரை ஆற்றினார். அருள்மொழி சர்வதேச கை கழுவுதல் தின சிறப்புரை ஆற்றினார்.

இணைச் செயலர் ராஜசூர்யா, ஆசிரியர் கோபாலசுவாமி & ஆசிரியை கௌளரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் மலை வாழ் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பின்னர் பள்ளியின் மாணவ மாணவியர்கள் அனைவருக்கும் மேஜர் டாக்டர் கவிதா மற்றும் முன்னாள் என்சிசி மாணவியர்கள் சாப்பிட உணவு தட்டு மற்றும் பள்ளி சாதனங்களை வழங்கினார்கள். நிறைவாக கொங்குகளின் செயலாளர் முனைவர் ராஜா நன்றிகூறினார். முகாமின் தொடர்ச்சியாக மேஜர் டாக்டர். கவிதா மற்றும் இணைச் செயலர் ராஜ சூர்யா தலைமையில் என்.சி.சி மாணவிகளுக்கு மலை பயண பயிற்சி வழங்கப்பட்டன. கொங்காடை மக்களை என்சிசி மாணவியர்கள் சந்தித்து அவர்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொண்டனர்.

இந்த முகாமை கொங்கு கிளையின் தலைவர் பேராசிரியை சந்திரா தங்கவேல் மற்றும் மேஜர் டாக்டர் கவிதா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# ஊட்டி குட்ஷெப்பர்டு சர்வதேச பள்ளியின் ஆண்டு விழா: விளையாட்டு ஆர்வலர் நந்தன் காமத் பரிசுகளை வழங்கினார்



ஊட்டி, அக்.18-

ஊட்டி, எம்.பாலாடா பகுpயில் சிறப்பாக செயல்பட்டு வரும் குட் ஷெப்பர்ட் இன்டர்நேஷனல் பள்ளியின் நிறுவனர் தின விழா நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது.

விழாவில் வழக்கறிஞரும், விளையாட்டு ஆர்வலருமான நந்தன் காமத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு பேசியதாவது- குட்ஷெப்பர்ட்,ன்டர்நேஷனல்பள்ளியின்அக்டோபர் 17, 2025 அன்றுநடைபெற்றநிறுவனர்தினவிழா, முதன்மைவிருந்தினராக நந்தன்காமத்அவர்களின்ஊக்கமளிக்கும்உரையுடன்சிறப்பாகநடைபெற்றது. ,வர்ஒருபுகழ்பெற்றவழக்கறிஞர்மற்றும்விளையாட்டுதொழிலதிபர். தேசியசட்டப்பள்ளி, ஆக்ஸ்ஃபோர்ட்மற்றும் ஹார்வர்ட்பல்கலைக்கழகங்களில்பயின்றதனதுகல்விஅனுபவத்தின்அடிப்படையில், தகுமைமற்றும்வாழ்நாள்முழுவதும்கற்றலின்முக்கியத்துவத்தைஎடுத்துரைத்தார்.

சட்டம் மற்றும் விளையாட்டுநிர்வாகத்தில்தனதுஅனுபவங்களைப்பகிர்ந்து, சலுகையைஒருபொறுப்பாகவும் வாய்ப்பாகவும்கருதுவதுபற்றி பேசினார். காமத்உண்மையானவெற்றிக்குஅவசியமான மூன்றுகுணங்களைவலியுறுத்தினார் - நேர்மை, மரியாதை மற்றும்தகுமை. இவற்றைஅபினவ்பிந்த்ரா, ராஜர்பெடரர், ரஃபேல்நடால் மற்றும் விராட்கோஹ்லியின ;உதாரணங்கள் மூலம் விளக்கினார். இவற்றைசலுகையின்மருந்தாகவிவரித்து, தனிநபர்களைநம்பகத்தன்மையிலும், நன்றியுணர்விலும் வேரூன்றச்செய்வதாகக் கூறினார். ஸ்டீவ் ஜாப்ஸ்மற்றும்ஜேன்குடால் ஆகியோரைமேற்கோள்காட்டி, மாணவர்களுக்கு அனைவரின் ஒன்றிணைவு மற்றும் ;நோக்கமுள்ள செயல்பாடு அர்த்தமுள்ள மாற்றத்தைக ;கொண்டுவரும் என்றுநினைவூட்டினார்.

அக்கறை, தொலைநோக்கு மற்றும் பொருந்தமான சூழலைவளர்ப்பதற்காக குட்ஷெப்பர்ட் இண்டர்நேஷனல் பள்ளியைப் பாராட்டினார்.

அந்தநிறுவனம்உண்மையிலேயேதனதுபெயருக்கு ஏற்ப மாணவர்களை கருணையுள்ள தலைவர்களாக மாற்றவழிகாட்டுகிறதுஎன்று உறுதிப்படுத்தினார் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு கோப்பைகள் மற்றும் பரிசுகளை சந்த்யா குமார் வழங்கினார்.

ஆண்டு விழாவில் மாணவர்கள் அணிவகுப்பு, இசைக் குழு நிகழ்ச்சி, நடன நிகழ்ச்சி, ஏரோபிக் ஜிம்னாஸ்டிக்ஸ், மலை ஏற்ற திறமைகள் மற்றும் குதிரைச்சவாரி நிகழ்ச்சிகளை சிறப்பாக வழங்கினர். விழாவில் பள்ளியின் தலைவர் ஜேக்கப் தாமஸ், மூத்த துணை தலைவர் சாரா ஜேக்கப், பள்ளி தலைவர் வினோத் சிங் மற்றும் தலைமை ஆசிரியை தீபா சுரேஷ் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். பல முக்கிய விருந்தினர்கள், முன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பலர் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தீபாவளி - மஞ்சள் விலை ஒரு குவிண்டாலுக்கு 500 வரை உயர்வு

ஈரோடு, அக்.18 -

தீபாவளி பண்டிகை காரணமாக தேவை அதிகரித்து ஈரோடு மார்க்கெட்டில் மஞ்சள் விலை ரூ.500 வரை குவிண்டாலுக்கு உயர்ந்துள்ளது.இது குறித்து ஈரோடு மஞ்சள் வணிகர் மற்றும் கிடங்கு உரிமையாளர் சங்க செயலாளர் சத்தியமூர்த்தி கூறியதாவது:- கடந்த இரு மாதங்களாக மஞ்சள் விலை உயராமல் குவிண்டால் ரூ.12 ஆயிரத்து 500 முதல் ரூ.13, 250 வரை நீடித்தது. தீபாவளி உள்ளிட்ட பண்டிகை காலமாக உள்ளதால் தேவை அதிகரித்து விற்பனையும் அதிகரித்தது. நேற்று முன்தினம், நேற்று விரலி மஞ்சள் ரூ.13,800 - 14, 100 ஆக உயர்ந்துள்ளது சராசரியாக குவிண்டாலுக்கு 500 ரூபாய்க்கு உயர்வாகும். கிழங்கு மஞ்சளும் அதே விலை உயர்வு கண்டுள்ளது. டிசம்பர் மாதத்திற்கு பின் மஞ்சள் விலை கணிசமாக உயரும் என எதிர்பார்க்கிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.கீழ்பவானி ஆயக்கட்டு நில பாசன தாரர்கள் சங்க தலைவர் பெரியசாமி கூறும்போதுபண்டிகை காலமாக தொடர்வதால் மஞ்சள் தேவை அதிகரித்துள்ளது. மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, மாநிலங்களில் அதிக மழையால் விளைச்சல் பாதித்துள்ளது.எனவே அந்த விலை குறைவதால் நல்ல மஞ்சள் ஈரோட்டுக்கு வரத்தாகி உள்ளது. இருப்பினும் ஈரோடு மஞ்சளுக்கான விலை குறையாது என எதிர்பார்க்கிறோம் என்றார்.

# நீர்பிடிப்பு பகுதியில் தொடர் மழை 99 அடியை நெருங்கும் பவானிசாகர் அணையின் நீர்மட்டம்

ஈரோடு, அக்.18-

ஈரோடு , கரூர். திருப்பூர் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், 2.47 லட்சம் விளை நிலங்களின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி இருந்து வருகிறது.

இந்நிலையில் நீர்பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று காலை பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 98.52 அடியாக உயர்ந்துள்ளது.அணைக்கு 3,122 கன அடியாக நீர் அதிகரித்து வந்து கொண்டிருக்கிறது.கீழ்பவானி வாய்க்காலுக்கு 800 கன அடியும், பவானி ஆற்றுக்கு 100 கன அடியும் என மொத்தம் அணையில் இருந்து 900 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. வரட்டு பள்ளம், பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி வரட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம் 21.56 அடியாக உள்ளது. பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் 8.53 அடியாக உள்ளது. அதே நேரம் பரவலாக மழை பெய்து வருவதன் காரணமாக குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் கடந்த சில நாட்களாக உயர்ந்து வருகிறது. இன்று காலை நிலவரப்படி 35.35 அடியாக உயர்ந்து உள்ளது.

# வனத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் அதிக ஒலி எழுப்பும் பட்டாசுகளை தவிர்க்க வேண்டும்: மாவட்ட வன அலுவலர் கவுதம் அறிவுரை

ஊட்டி, அக்.18-

நீலகிரியில் வனத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் அதிக ஒலி எழுப்பும் பட்டாசுகளை தவிர்க்க வேண்டும் எனவும், வனப் பகுதி அருகில் சிறப்பு கண்காணிப்பு குழுவினர் ஆய்வுப் பணியில் ஈடுபடுவார்கள் என்றும் மாவட்ட வன அலுவலர் கவுதம் கூறினார்.

நீலகிரி மாவட்டத்தில் வனப்பகுதிகளில்; காட்டு யானைகள், காட்டெருமைகள், மான்கள், புலி, சிறுத்தை, கரடி உட்பட அரிய வகை பறவை இனங்கள் வாழ்ந்து வருகின்றன. பறவைகள் மற்றும் வன உயிரினங்கள் பட்டாசு சத்தம் கேட்டால் மிகவும் அச்சமடைகின்றன. குறிப்பாக சிறிய வகை பறவைகள் மற்றும் குஞ்சுகள் இதனால் பெரும் பாதிப்படைகின்றன. மேலும் வனவிலங்குகள் மிரட்சி அடைந்து வனப்பகுதியை ஒட்டிய ஊருக்குள் புகுந்து மனிதர்களை தாக்கும் அபாயமும் ஏற்படுகிறது. எனவே பட்டாசு வெடிக்கும் போது வனப்பகுதி அருகில் வெடிக்க வேண்டாம் என வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். இது குறித்து நீலகிரி மாவட்ட வன அலுவலர் கவுதம் கூறியதாவது:-தீபாவளியை முன்னிட்டு பட்டாசு வெடிக்கும் போது வன விலங்குகள் மற்றும் பறவைகள் வேறு இடத்திற்கு இடம்பெயறும் நிலை ஏற்படும். கருவுற்றுள்ள வன விலங்குகள் கடுமையாக பாதிக்கப்படும். நீலகிரி வன கோட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள தங்கும் விடுதிகளிலும் கிராமங்களிலும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் வனவிலங்குகளுக்கு இடையூறு இல்லாமல் தீபாவளி பண்டிகை கொண்டாட வேண்டும். குறிப்பாக அதிக ஒலி எழுப்பும் பட்டாசுகளை பயன்படுத்த வேண்டாம்.வனப்பகுதி ஒட்டி உள்ள பகுதிகளில் சிறப்பு தணிக்கை குழுவினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட உள்ளனர் என்றும் மீறுபவர்கள் மீது அபராதம் விதிக்கப்படும். ஏற்கனவே இது குறித்து வனப்பகுதி அருகில் உள்ள தனியார் தங்கும் விடுதிகளுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. முடிந்தவரை வனப் பகுதி அருகில் பட்டாசு வெடிக்காமல் தீபாவளி கொண்டாட மக்கள் முன்வர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# பாவேந்தர் இலக்கியப் பேரவை சார்பாக பாட்டரங்கம்

ஊட்டி, அக்.18-

பாவேந்தர் இலக்கியப் பேரவை சார்பாக பாட்டரங்கம் ஊட்டியிலுள்ள ஒய்எம்சிஎ அருந்தமிழ் கலையரங்கில் நடைப் பெற்றது. ஒய்எம்சிஎ செயலர் மேக்ஸ்வில்லியர்ட் ஜெயப்பிரகாஷ் வரவேற்புரை நிகழ்த்திட தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலுடன் நிகழ்ச்சி தொடங்கியது. கவிஞர் ஜனார்தனன் முன்னிலையில் சங்கத்தமிழ் பாடலை கவிஞர் சுகுணன், காவடிச்சிந்தெனும் குறிஞ்சிப் பாடலை சரவணன், முருகாற்றுப்படை எனும் முத்தமிழ் பாடலை கலையாசிரியை முருகேசுவரி தான்சென், இசைமேதை வர்ணிக்கும் பாடலை நீலமலை ஜேபி ஆகியோர் பாட்டரங்கில் பாடல்களை பாடினர். கவிஞர் கிருஷ்ணராஜ் பிராவிடன்ஸ் கல்லூரி நிர்வாகி விமல்குமார் வாழ்த்துரை வழங்கிட சகாய் நன்றி நவில நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்


IN THE COURT OF THE HON'BLE-VI- SMALL CAUSESCOURT AT CHENNAI
M.C.O.P.No. 46 OF 2025
Minor.S.Pugazhloviya,
And 2 Others.
..Petitioners
-Vs-
1.Suresh, 2.United India Insurance Co Ltd Chennai.
Respondents
To
Suresh, Son of Logu,
No.1/158-E, Mahakaniyam Main Road, Malaipattu,
Kancheepuram-601301
Respondent 1
Take notice that the above claim petition came up on 08.10.2025 before the Hon'ble VI Small Causes for hearing and the Hon'ble Court was pleased to order notice to you returnable by 21.11.2025. Ensure your presence before the said court on 21.11.2025 at 10.30 a.m. either in person or through pleader without fail, failing which, the petition will be decided in your absence.
C.THANGARAJU
P. MURUGESAN
Counsel for Petitioners



மாண்பமை 6-வது கூடுதல் குடும்பநல நீதிமன்றம், சென்னை
IDOP. எண்.2219/2025
திருமதி. P. ஏஞ்சலினா
மனுதாரர்
எதிர்
திரு. சாம் டேவிட் செல்வராஜன்
எதிர்மனுதாரர்
பெறுநர்
திரு. சாம் டேவிட் செல்வராஜன், த/பெ. விமலா சுகந்தி, E11/174. Parry Buildings, எம்.கே.பி. நகர், வியாசர்பாடி,
சென்னை 600 039,
மேற்கண்ட வழக்கு மேற்கண்ட நீதிமன்றத்தில் வருகின்ற 10.11.2025 அன்று தங்கள் வருகைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று தாங்கள் நேரிலோ அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமோ மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்குஆஜராகத் தவறினால் வழக்கின் முடிவு ஒரு தலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.
திருமதி. P. ஏஞ்சலினா
மனுதாரர் நேரில்



11- வது
ஸ்மால் காஸஸ் கோர்ட், சென்னை
RLTOP.No.442 of 2025
1. திருமதி.A. பிர்தௌஸ் பீவி
2. திருமதி. S. லுத்பியா பீவி
3. திருமதி. S.ரமீசா பீவி
4. திருமதி. A. சஹாதுனா பீவி
1 முதல் 4 நபர்களுக்காக அவர் பொது அதிகாரி
திரு. J. முகமது அமீன்
எண்.149/72 அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை 600 001.
.......மனுதாரர்
....எதிர் ...
திரு. கண்ணன் ஆச்சாரி
...... எதிர்மனுதாரர்
பெறுநர்
திரு. கண்ணன் ஆச்சாரி,
புது இலக்கம் 11, பழைய இலக்கம் 6 பேக்கர் தெரு, 3வது மாடி, போர்ஷன் எண்.10 சென்னை 600 001.
உங்களை மனு கட்டிடத்திலிருந்து காலி செய்ய தாக்கல் செய்த மேற்படி மனுவில் நீங்கள் கோர்ட்டில் ஆஜராக மேற்படி கோர்ட்டரால் 31.10.2025 காலை 10.30 மணிக்கு தேதியிடப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் நீங்கள் மேற்படி கோர்ட்டில் மேற்சொன்ன மனுவில் ஆஜராக தவறும் பட்சத்தில் உங்களுக்கு எதிராக கோர்ட்டாரால் ஒருதலைபட்சமாக தீர்ப்பளிக்கப்படும் என்பதை இதன் மூலம் உங்களுக்கு அறிவிக்கிறேன்.
இப்படிக்கு
M.A.MD.KARAMATHULLAH
மனுதாரர் வழக்கறிஞர்



16- வது
ஸ்மால் காஸஸ் கோர்ட், சென்னை
E.P.No. 946 of 2025 In
RLTOP.No.335 of 2024
M ஹாஜா நௌசத் அலி,
ஜின்னா தெரு, கிளியனூர் கிராமம்.
நாகப்பட்டினம் தாலுக்கா.
அவர்களுக்காக அவர் பொது அதிகாரி திரு. J. முகமது அமீன் எண்.149/72 அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை 600 001.
...... மனுதாரர்/D.H
.....எதிர்...
மெரிடெக் சர்வேயர்
......எதிர்மனுதாரர்/J.D
பெறுநர்
மெரிடெக் சர்வேயர்,
புது இலக்கம் 273, பழைய இலக்கம் 130. தம்பு செட்டி தெரு, 2வது தளம், அறை எண்.3. ஜார்ஜ்டவுன்,
சென்னை 600 001.
உங்களை மனு கட்டிடத்திலிருந்து காலி செய்ய மனுதாரர் மேற்படி மனுவில் பெற்ற உத்தரவினை நிறைவேற்றுகை செய்ய தாக்கல் செய்த மேற்படி மனுவில் நீங்கள் கோர்ட்டில் ஆஜராக மேற்படி கோர்ட்டரால் 27.10.2025 காலை 10.30 மணிக்கு தேதியிடப்பட்டு ள்ளது. மேற்படி தேதியில் நீங்கள் மேற்படி கோர்ட்டில் மேற்சொன்ன மனுவில் ஆஜராக தவறும் பட்சத்தில் உங்களுக்கு எதிராக கோர்ட்டாரால் ஒருதலைபட்சமாக தீர்ப்பளிக்கப்படும் என்பதை இதன் மூலம் உங்களுக்கு அறிவிக்கிறேன்.
இப்படிக்கு
M.A.MD.KARAMATHULLAH
மனுதாரர் வழக்கறிஞர்



XXVIII ASST
CITY CIVIL COURT AT CHENNAI (ALLIKULAM) E.P.No. 850 of 2025
In
O.S.No. 3763 of 2019
Mrs.R.Nandhini
..DH/Plaintiff
Vs
Mrs.G.Saradha
..JD/Defendants
To
Mrs.G.Saradha JD
W/o. P.Muthu
No.7A/1, Old No.7A, Bharath Road, Perambur, Chennai-600 011
Please take notice that in the above said matter came up before the learned XXVIII, Asst. Judge City Civil Court, at Chennai on 15.10.2025 and the Hon'ble Judge ordered notice to you for hearing on 12.11.2025.
Hence it is requested you to appear before above said court on 12.11.2025 at 10.30 am your self or through your pleader failing which the said mater will be decided on your absence on merit.
D.J.Janardhanan
Counsel for DH/Plaintiff



Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# இந்திய ஒருநாள் அணி கேப்டன் பதவியில் இருந்து நீக்கம் ஏன்..?

## ரோகித்திடம் காம்பீர் விளக்கம்



**பெர்த், அக். 18-**

ரோகித் சர்மா, இந்திய ஒருநாள் போட்டி கேப்டன் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டது குறித்து தலைமை பயிற்சியாளர் காம்பீர் விளக்கமளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**நாளை முதல் போட்டி...**

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் 3 ஒரு நாள் போட்டி மற்றும் ஐந்து 20 ஓவர் போட்டிகளில் விளையாடுகிறது. இரு அணிகளும் மோதும் முதல் ஒரு நாள் போட்டி பெர்த்தில் நாளை நடக்கிறது. டெஸ்ட் மற்றும் 20 ஓவர் போட்டியில் ஓய்வு பெற்ற ரோகித் சர்மா ஒரு நாள் போட்டியில் மட்டும் விளையாடுவேன் என்று தெரிவித்திருந்த நிலையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் அவரது கேப்டன் பதவி சுப்மன் கில்லுக்கு வழங்கப்பட்டது. இதையடுத்து அணியில் ஒரு வீரராக ரோகித்சர்மா களம் இறங்குகிறார்.

**தீவிர பயிற்சியில்...**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடருக்கு ரோகித் சர்மா, விராட் கோலி உள்ளிட்ட இந்திய வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். இதற்கிடையே பயிற்சியின்போது ரோகித் சர்மாவிடம் பயிற்சியாளர் காம்பீர் தனியாக நீண்ட நேரம் பேசி கொண்டிருந்தார். அப்போது இருவரும் பல விஷயங்கள் குறித்து விவாதித்தனர். இதில் கேப்டன் பதவியில் இருந்து நீக்கப்பட்டது ஏன்? சுப்மன் கில் எதற்காக கேப்டனாக அறிவிக்கப்பட்டார் என்பது குறித்து ரோகித் சர்மாவிடம் காம்பீர் விளக்கம் அளித்ததாக கூறப்படுகிறது. மேலும் அணியில் ரோகித் சர்மாவின் பங்கு என்ன என்பது குறித்து கம்பீர் விவரித்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

**மிகவும் முக்கியம்...**

அனுபவம் வாய்ந்த ரோகித் சர்மா, கோலியின் பங்களிப்பு இளம் வீரர்கள் அடங்கிய இந்த அணிக்கு மிகவும் முக்கியம் என்றும் இதனால் எந்த ஒரு சுமையும் இன்றி சுதந்திரமாக விளையாடும்படியும் ரோகித் சர்மாவிடம் காம்பீர் தெரிவித்துள்ளார். புதிய கேப்டனான சுப்மன் கில்லுக்கு கிரிக்கெட் நுணுக்கங்கள் மற்றும் கேப்டன்ஷிப் எப்படி செய்ய வேண்டும் என்று களத்தில் வழிநடத்த வேண்டும் என்றும் கம்பீர் கேட்டுக்கொண்டதாக தெரிகிறது.

# கிரிக்கெட் வீரர் ரவீந்திர ஜடேஜா மனைவி அமைச்சராக பதவியேற்பு



**அகமதாபாத், அக். 18-**

பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் சொந்த மாநிலமான குஜராத்தில் கடந்த 2022-ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் பாஜக மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. இதன் மூலம் பூபேந்திர படேல் 2-வது முறையாக முதல்-அமைச்சர் பதவியை தக்க வைத்தார்.

இந்நிலையில் மாநில அமைச்சர் சபை நேற்று விரிவாக்கம் செய்யப்படுவதாக மாநில அரசு தகவல் வெளியிட்டது. அதற்கு வசதியாக முதல்வர் பூபேந்திர படேலை தவிர அவரது அமைச்சர்சபையில் இடம்பெற்றிருந்த 16 அமைச்சர்களும் மாலையில் தங்கள் பதவியை ராஜினாமா செய்தனர். இதைத் தொடர்ந்து புதிய அமைச்சர்சபை நேற்று காலையில் பதவியேற்றது.

பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் ரவீந்திர ஜடேஜாவின் மனைவி ரிவாபா ஜடேஜாவும் அமைச்சர்யாக பதவியேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த 2019-ம் ஆண்டு பாஜகவில் சேர்ந்த ரிவாபா, 2022-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் ஜாம்நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

### தீபாவளி பண்டிகையை

# கோவாவில் கடற்படை வீரர்களுடன் கொண்டாட பிரதமர் மோடி திட்டம்

**புதுடெல்லி, அக். 18-**

இந்த ஆண்டு தீபாவளியை கோவா கடற்கரையில் கடற்படை வீரர்களுடன் இணைந்து கொண்டாட பிரதமர் மோடி முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த 2014-ம் ஆண்டு நாட்டின் பிரதமராக பொறுப்பேற்றதில் இருந்து பிரதமர் மோடி ராணுவத்தினருடன் தீபாவளி கொண்டாடுவதை வழக்கமாக கடைபிடித்து வருகிறார். அந்த வகையில், பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு எதிராக நமது ராணுவம் மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூரின் சிறப்பான வெற்றியைக் கொண்டாட பிரதமர் மோடி முடிவு செய்துள்ளார். அதனால், இந்த ஆண்டு தீபாவளியை கோவா கடற்கரையில் கடற்படை வீரர்களுடன் இணைந்து கொண்டாட பிரதமர் மோடி முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த 2014-ல் லடாக்கில் உள்ள சியாச்சின் பனிப்பிரதேசத்துக்கு சென்ற அவர், அங்கு பாதுகாப்புப் படையினருடன் இணைந்து தீபாவளி கொண்டாடினார். 2015-ல், 1965-ம் ஆண்டில் நடைபெற்ற இந்தியா-பாகிஸ்தான் போரில் நமது வீரர்களின் தியாகத்தை போற்றும் வகையில் பஞ்சாப் அமிர்தசரசில் உள்ள டோக்ராய் போர் நினைவுச் சின்னத்தில் நடைபெற்ற தீபாவளி கொண்டாடத்தில் பிரதமர் பங்கேற்றார். 2024-ல் குஜராத்தின் சர் க்ரீக்கில் ராணுவத்தினருடன் தீபாவளியை கொண்டாடினார்.

# பீகாரில் என்.டி.ஏ. வென்றால் நிதிஷ்குமார் முதல் மந்திரியா?

## மத்திய அமைச்சர் அமித்ஷா விளக்கம்

**பாட்னா, அக். 18-**

என்.டி.ஏ. வென்றால் நிதிஷ்குமார் முதல் மந்திரியா? என்ற கேள்விக்கு அமித்ஷா விளக்கமளித்துள்ளார்.

பீகார் மாநில சட்டசபைத் தேர்தல் நவம்பர் 6, 11-ம் தேதிகளில் இரு கட்டங்களாக நடைபெற உள்ளது. நவம்பர் 14-ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கும், ராஷ்டிரிய ஜனதா தளம், காங்கிரஸ் அடங்கிய மெகா கூட்டணிக்கும் இடையே நேரடி போட்டி நிலவுகிறது.

பா.ஜ.க. 101, ஐக்கிய ஜனதா தளம் (ஜேடியூ) 101, லோக் ஜனசக்தி - ராம்விலாஸ் (எல்ஜேபி-ஆர்) 29 , ராஷ்டிரிய லோக் மோர்ச்சா (ஆர்எல்எம்) 6 , இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா (எச்ஏஎம்) 6 தொகுதிகளில் போட்டியிடுகின்றன. இந்நிலையில், மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்பொது அவர் கூறியதாவது:-

பீகார் தேர்தலில் என்.டி.ஏ. கூட்டணி வெற்றி பெற்றால் நிதிஷ்குமார்தான் முதல் மந்திரியா என்பதை நான் முடிவு செய்ய முடியாது. இந்த தேர்தலில் எங்கள் கூட்டணி நிதிஷ்குமார் தலைமையில் போட்டியிடுகிறது என்பதை மட்டுமே என்னால் இப்போது சொல்ல முடியும். தேர்தலுக்கு பிறகு கூட்டணி கட்சி தலைவர்கள் கூடி பேசி அதை முடிவு செய்வார்கள். பீகாரில் லாலு பிரசாத் யாதவின் ஆட்சியை கண்ட மக்கள் மீண்டும் அந்தக் கட்சியை ஆட்சியில் அமர வைக்க மாட்டார்கள் என தெரிவித்தார்.

# ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம்: புகாரளிக்க தொடர்பு எண்கள் அறிவிப்பு

**சென்னை, அக். 18-**

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பது குறித்து தொலைபேசி வாயிலாகவும், வாட்ஸ் ஆப் மூலமும் புகார் தெரிவிப்பதற்கான தொடர்பு எண்களை போக்குவரத்து துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து போக்குவரத்து துறை சார்பில் வெளியான அறிக்கையில், 'எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் அதிகப்படியான கட்டணம் வசூலிப்பதை தடுப்பதற்கும், போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்துவது தொடர்பாகவும் போக்குவரத்து ஆணையர் தலைமையில் காவல் துறை இணை மற்றும் ஆணையர்கள், சிஎம்டிஏ பொது மேலாளர், எம்டிசி துணை மேலாளர், எஸ்இடிசி மேலாண் இயக்குநர் மற்றும் தமிழ்நாடு ஆம்னி பேருந்து உரிமையாளர் சங்க நிர்வாகிகளுடன் கடந்த அக்டோபர் 14 அன்று மாநில போக்குவரத்து ஆணையரகத்தில் கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் ஆம்னி பேருந்து உரிமையாளர்களுக்கு அபி பஸ், ரெட் பஸ், மேக் மை ட்ரிப் போன்ற முன் பதிவு ஆன்லைன் செயலிகள் கண்காணிக்கப்பட்டு அதிகமாக கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆம்னி பேருந்துகளை கண்டறிந்து கட்டணங்களை குறைக்க அறிவுறுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பது குறித்து கீழ்காணும் எண்கள் மூலம் தொலைப்பேசி வாயிலாகவோ, வாட்ஸ் ஆப் மூலம் குறுஞ்செய்தி அல்லது குரல் பதிவாகவோ புகார் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**புகாரளிக்க வேண்டிய எண்கள்:**

1. சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை 1800 425 6151.
2. இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (வடக்கு) 97893 69634.
3. இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (தெற்கு) 93613 41926.
4. இணைப்போக்குவரத்து ஆணையரகம், மதுரை 90953 66394.
5. இணைப்போக்குவரத்து ஆணையரகம், கோயம்புத்தூர் 93848 08302.
6. துணைப்போக்குவரத்து ஆணையரகம், விழுப்புரம் 96773 98825.
7. துணைப்போக்குவரத்து ஆணையரகம், வேலூர் 98400 23011.
8. துணைப்போக்குவரத்து ஆணையரகம், சேலம் 78456 36423.
9. துணைப்போக்குவரத்து ஆணையரகம், ஈரோடு 99949 47830.
10. துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருச்சிராப்பள்ளி 90660 32343.
11. துணைப்போக்குவரத்து ஆணையரகம், விருதுநகர் 90257 23800.
12. துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருநெல்வேலி 96981 18011.
13. துணைப்போக்குவரத்து ஆணையரகம், தஞ்சாவூர் 95850 20865.

# ஜனவரி 2026 முதல் 20 ஓவர் டெஸ்ட் கிரிக்கெட் அறிமுகம்

**மும்பை, அக். 18-**

புதிய கிரிக்கெட் வடிவமான "டெஸ்ட் ட்வென்டி" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது கிரிக்கெட்டின் 4-வது வடிவமாக பார்க்கப்படுகிறது. டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளுக்கு அடுத்ததாக இந்த வடிவம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த தொடரின் முதல் சீசன் இந்தியாவில் ஜனவரி 2026-ல் தொடங்கவுள்ளது.

**இளைஞர்களை ஈர்க்க...**

இந்த வடிவம் 13-19 வயதுடைய இளைஞர்களை கவர்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் பாரம்பரியமாக பிரபலமில்லாத நாடுகளில் விளையாட்டை பரப்புவது இதன் முதன்மை நோக்கங்கள். இது டெஸ்ட் கிரிக்கெட்டின் மரபுகளை பாதுகாக்கவும், இளம் தலைமுறையை ஈர்க்கவும் உதவும். இதன் விதிமுறைகளி படி, ஒரு போட்டி மொத்தம் 80 ஓவர்களைக் கொண்டது. டெஸ்ட் போட்டிகளைப் போலவே, ஒவ்வொரு அணியும் இரண்டு முறை (தலா 20 ஓவர்கள்) பேட்டிங் செய்யும். இதன் முடிவுகள் வெற்றி, தோல்வி, சமன் அல்லது டிரா என அமையலாம். இது டெஸ்ட் கிரிக்கெட்டின் உத்திகளையும், டி20யின் வேகத்தையும் இணைக்கிறது.

**இந்தியாவில்...**

இந்த தொடரின் முதல் சீசன் ஜனவரி 2026-ல் தொடங்கவுள்ளது. முதல் இரண்டு பதிப்புகளும் இந்தியாவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. படிப்படியாக இது சர்வதேச சுற்றுப் போட்டியாக மாற உள்ளது. முதலில் ஆறு உலகளாவிய அணிகள் இதில் பங்கேற்கும். அதன்படி இந்தியாவில் மூன்று, துபாய், லண்டன் மற்றும் அமெரிக்காவில் தலா ஒன்று. ஒவ்வொரு அணியிலும் 16 வீரர்கள் இடம்பெறுவார்கள். அதில் 8 இந்தியர்கள், 8 சர்வதேச வீரர்கள் அடங்கும்.

**உருவாக்கியவர்...**

இந்த புதுவடிவ கிரிக்கெட்டை உருவாக்கியவர் கவுரவ் பஹிர்வானி. இதன் ஆலோசனை குழுவில் முன்னாள் சர்வதேச கிரிக்கெட் வீரர்களான சர் கிளைவ் லாய்ட், மேத்யூ ஹெய்டன், ஹர்பஜன் சிங், ஏபி டிவில்லியர்ஸ் போன்றோர் இடம் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது

# வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள 22-ம் தேதி உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை: அமைச்சர் தகவல்

**சென்னை, அக். 18-**

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள 22-ம் தேதி உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்படும் என்று சட்டசபையில் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் நேற்று கடலூர் மாவட்டத்தில் மின்னல் தாக்கி 4 பெண்கள் உயிரிழந்தது தொடர்பாக அ.தி.மு.க. எம்.எல்.ஏ. ஆர்.பி.உதயகுமார், வேல்முருகன் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினார்கள். அப்போது அவர்கள் பருவமழை தொடங்கியுள்ள இந்த நேரத்தில் கிராமப் புறங்களில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் இடிதாங்கிகளை அமைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு பதில் அளித்து அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் பேசுசியதாவது:- வடகிழக்கு பருவமழை இந்த ஆண்டு அதிக அளவில் பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது. இதனை கருத்தில் கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென முதல்வர் அறிவுறுத்தி உள்ளார். இதன்படி வருகிற 22-ந்தேதி வடகிழக்கு பருவமழை தொடர்பாக உயர் அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. கிராமப்புறங்களில் மின்னல் தாக்குவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என உறுப்பினர்கள் தெரிவித்தனர். இதன்படி கிராம பகுதிகளில் உள்ள அரசு அலுவலகங்களில் இடி தாங்கிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

## இன்று 9 மாவட்டங்களில் கனமழை

**சென்னை, அக். 18-**

தமிழகத்தில் இன்று நீலகிரி, ஈரோடு, சேலம், கோவை, திருப்பூர், கரூர், நாமக்கல், திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதையொட்டி வருகிற 23-ந்தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்காலில் கனமழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனிடையே, தமிழகத்தில் இன்று கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மதிய வேளையில் வெயிலின் தாக்கம் சற்று குறைந்து மாலை அல்லது இரவு நேரங்களில் மழைக்கு வாய்ப்புள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆர்.சி.பி. அணியை விற்க முடிவு: கைப்பற்ற 6 நிறுவனங்கள் போட்டி



**பெங்களூரு, அக். 18-**

பிரிட்டனின் டயாஜியா குழுமத்திற்கு சொந்தமான ஆர்.சி.பி. அணியை விற்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கூட்ட நெரிசல் சம்பவத்தையடுத்து அந்த குழுமம் அணியை விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது.

**11 பேர் உயிரிழப்பு...**

சமீபத்தில் நடைபெற்று முடிந்த ஐ.பி.எல். தொடரின் 18-வது சீசனில் ஆர்.சி.பி. அணி கோப்பையை முதல் முறையாக வென்று சாதனை படைத்தது. இதனை பெங்களூருவில் உள்ள சின்னசாமி மைதானத்தில் சிறப்பாக கொண்டாட அணி நிர்வாகம் முடிவெடுத்தது. அதன்படி சின்னசாமி மைதானத்திற்கு வருகை தந்தனர். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். 50 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

**அணியை விற்க...**

இதன் காரணமாக அணி நிர்வாகம் மீது வழக்குபதிவு செய்யப்பட்டது. இந்த சம்பவத்திற்குப் பிறகு, சின்னசாமி மைதானம் பெரிய நிகழ்ச்சிகளுக்கு பாதுகாப்பற்றது என அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து சின்னசாமி மைதானம் மூடப்பட்டது. அதனை தொடர்ந்து பிரிட்டனின் டயாஜியா குழுமத்திற்கு சொந்தமான ஆர்.சி.பி. அணியை விற்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அணியின் மதிப்பு சுமார் $2பில்லியனாக \(ரூ.17,762 கோடி) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகினது. கூட்ட நெரிசல் சம்பவத்தையடுத்து அந்த குழுமம் அணியை விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது.

**6 நிறுவனங்கள்...**

இந்நிலையில் ஆர்.சி.பி. அணியை வாங்க உள்நாட்டில் 4 நிறுவனங்களும் வெளிநாடுகளில் 2 நிறுவங்களும் ஆர்வம் காட்டுவதாக தகவல் வெளியாகி உள்ளது. அந்த வகையில் கோவிஷீல்டு தடுப்பூசி தயாரித்த சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா நிறுவனமானமும் ஆர்.சி.பி. அணியை வாங்க ஆர்வமாக உள்ளது. அதே போல அதானி குழுமமும் ஆர்வமாக உள்ளது. மேலும் பார்த் ஜிண்டால் (ஜே.எஸ்.டபிள்யூ குழுமம்), டெல்லியைச் சேர்ந்த பல துறை நலன்களைக் கொண்ட கோடீஸ்வரர், அமெரிக்காவை தளமாகக் கொண்ட இரண்டு தனியார் பங்கு நிறுவனங்கள் ஆர்.சி.பி. அணியை வாங்க ஆர்வமாக உள்ளது. ஆர்.சி.பி. அணியின் முதல் தலைவராக மல்லையா இருந்தார். அதனை தொடர்ந்து டயாஜியா குழுமம் இந்த அணியை வாங்கியது குறிப்பிடத்தக்கது.

### டி-20 உலகக்கோப்பை கிரிக்கெட்:

# கடைசி அணியாக யு.ஏ.இ. தகுதி



**மஸ்கட், அக். 18-**

டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு கடைசி அணியாக யு.ஏ.இ. தகுதி பெற்றுள்ளது. தகுதிச்சுற்று போட்டியில் ஜப்பானை வீழ்த்தி இடம்பிடித்துள்ளது.

**ஜப்பானுடன்...**

20 அணிகள் பங்கேற்கும் 10-வது 20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு பிப்ரவரி- மார்ச் மாதங்களில் இந்தியா மற்றும் இலங்கையில் நடக்கிறது. இதில் ஆசிய பசிபிக் தகுதி சுற்று போட்டியில் சூப்பர்-6 ஆட்டங்கள் ஓமன் தலைநகர் மஸ்கட்டில் நடந்து வருகிறது. இதில் நடந்த ஒரு ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகம் அணி, ஜப்பானை சந்தித்தது.

**கடைசி அணியாக...**

இதில் முதலில் பேட் செய்த ஜப்பான் 9 விக்கெட்டுக்கு 116 ரன்கள் எடுத்தது. அடுத்து களமிறங்கிய ஐக்கிய அரபு அமீரக அணி 12.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 118 ரன்கள் சேர்த்து 8 விக்கெட் வித்தியாசத்தில் 3-வது வெற்றியை பெற்று புள்ளி பட்டியலில் டாப்-3 இடத்தை உறுதி செய்ததுடன், உலகக் கோப்பை போட்டிக்கு 20-வது மற்றும் கடைசி அணியாக தகுதி பெற்றது.

**20 அணிகள் தகுதி**

இந்தியா, இலங்கை, ஆப்கானிஸ்தான், ஆஸ்திரேலியா, வங்காளதேசம், இங்கிலாந்து, தென்ஆப்பிரிக்கா, அமெரிக்கா, வெஸ்ட் இண்டீஸ், அயர்லாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், கனடா, இத்தாலி, நெதர்லாந்து, நமிபியா, ஜிம்பாப்வே, நேபாளம், ஓமன், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 20 அணிகள் இந்த உலகக் கோப்பையில் விளையாட உள்ளன.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

## 93 ரன்களில் சுருண்ட தமிழ்நாடு அணி

91-வது ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் தொடங்கியது. இதில் 'எலைட்' பிரிவில் பங்கேற்றுள்ள 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அணியும், தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் 'டாப்-2' இடங்களை பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு தகுதி பெறும். இதில் கோவையில் உள்ள எஸ்.என்.ஆர். கல்லூரி மைதானத்தில் நடந்து வரும் 'ஏ' பிரிவு ஆட்டம் ஒன்றில் தமிழ்நாடு-ஜார்கண்ட் அணிகள் விளையாடி வருகின்றன. இதில் 'டாஸ்' ஜெயித்து முதலில் பேட் செய்த ஜார்கண்ட் அணி முதல் இன்னிங்சில் 419 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக கேப்டன் இஷான் கிஷன் 173 ரன்கள் அடித்தார். தமிழக அணி தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் குர்ஜப்னீத் சிங் 4 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய தமிழக அணி வரிசையாக விக்கெட்டுகளை தாரை வார்த்தது. சச்சின் ரன் எதுவும் எடுக்காமலும், கேப்டன் ஜெகதீசன் 3 ரன்னிலும், பிரதோஷ் ரஞ்சன் பால் 9 ரன்னிலும், பாபா இந்திரஜித் ரன் எதுவுமின்றியும், ஆந்த்ரே சித்தார்த் 2 ரன்னிலும் நடையை கட்டினர். ஜார்கண்ட் அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறிய தமிழக அணி ஆட்ட நேர முடிவில் 11 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 18 ரன் எடுத்துதமிழ்நாடு அணி திணறியது. அம்ப்ரிஸ் 28 ரன்களும், ஜெகநாதன் ஹேம்சுதேசன் 14 ரன்களும், குர்ஜப்னீத் சிங் 12 ரன்களும் எடுத்து ஆட்டமிழக்க 93 ரன்னில் சுருண்டது.

# வி.ஐ.டி. போபால் பல்கலையில் 6-ம் ஆண்டு பட்டமளிப்பு விழா

## வேந்தர் டாக்டர் ஜி.விசுவநாதன் பங்கேற்பு




**சென்னை, அக். 18-**

வி.ஐ.டி. போபால் பல்கலைகழகத்தில் 6-ம் ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது. வேந்தர் டாக்டர் ஜி.விசுவநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வி.ஐ.டி. போபால் பல்கலைக்கழகம் தனது 6வது ஆண்டு பட்டமளிப்பு விழாவை அக்டோபர் 4, 2025 சனிக்கிழமை நடத்தியது, இதில் 2572 இளங்கலை பட்டதாரிகள், 503 முதுகலை பட்டதாரிகள், மற்றும் 18 முனைவர் பட்டங்கள் வழங்கப்பட்டன. வி.ஐ.டி. போபாலின் வேந்தர் டாக்டர் ஜி.விசுவநாதன் அவர்கள் விழாவுக்கு தலைமை தாங்கி உறுதிமொழியை நிர்வகித்தார்.

டாக்டர் சச்சிதானந்த ஜோஷி, இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் உறுப்பினர் மற்றும் செயலாளர், முக்கிய விருந்தினராக விழாவை அலங்கரித்தார். அவரது உரையில், கல்வியில் கலாச்சாரம் மற்றும் அறிவியலின் ஆழமான இணைப்பை அவர் முக்கியப்படுத்தினார். நவீன அறிவியல் மனித முன்னேற்றத்திற்கான கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களை வழங்கும் அதே வேளையில், மதிப்புகள், அடையாளம் மற்றும் அவற்றின் பயன்பாட்டை வழிநடத்தும் நெறிமுறை கட்டமைப்பை வடிவமைப்பது கலாச்சாரம் என்பதை அவர் குறிப்பிட்டார். பாரம்பரியம் என்பது ஒரு வரம்பு அல்ல, மாறாக வலிமையின் நங்கூரம், ஞானம், இரக்கம் மற்றும் நம்பிக்கை இவை மூன்றும் எதிர்காலத்தில் உயரப் பறக்க செய்யும் என்று டாக்டர் ஜோஷி குறிப்பிட்டார்.

பட்டமளிப்பு விழாவில் ஊக்கமளிக்கும் பேச்சாளர் மாளவிகா ஜோஷி, வி.ஐ.டி. துணைத் தலைவர் சங்கர் விசுவநாதன், வி.ஐ.டி. போபால் அறங்காவலர் ரமணி பாலசுந்தரம், வி.ஐ.டி. போபாலின் உதவி துணைத் தலைவர் காதம்பரி எஸ். விசுவநாதன், துணை வேந்தர் டி.பி. ஸ்ரீதரன், செயல் பதிவாளர் கே.கே. நாயர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் ஸ்குவாட்ஸ்டேக்கின் இணை நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி அபூர்வ் அகர்வால் கவுரவ விருந்தினராக கலந்து கொண்டார்.

# திண்டுக்கல் மேற்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் 54-ம் ஆண்டு தொடக்க விழா கொண்டாட்டம்



**திண்டுக்கல்.அக்.18-**

திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கழகத்தின் 54ம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு திண்டுக்கல் பேருந்து நிலையம் அருகே உள்ள புரட்சித்தலைவர் எம்ஜிஆரின் திரு உருவ சிலைக்கு கழக அமைப்பு செயலாளர் வி.மருதராஜ் தலைமையில் மாநகராட்சி எதிர்க்கட்சி தலைவர் சி.எஸ். ராஜமோகன் முன்னிலையில் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கி கோலாகலமாக கொண்டாடினர். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் என்.இராஜசேகர், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாரதி முருகன், மாநில பொதுக்குழு உறுப்பினர் நெப்போலியன், மதுரை மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைச் செயலாளர் வீரமார்பன், ,பகுதி செயலாளர்கள் சுப்பிரமணி, மோகன், வி.டி.ராஜன்,சேசு, முரளி, இக்பால், மாவட்ட பாசறை செயலாளர் சிவபாரதி, மாமன்ற உறுப்பினர் பாஸ்கர், மாவட்ட வழக்கறிஞர் அணி செயலாளர் ஜெயபால், முன்னாள் ஆவின் சேர்மன் திவான் பாட்சா,மாவட்ட மருத்துவர் அணி செயலாளர் ராஜசேகர்,மாவட்ட ஓட்டுனர் அணி செயலாளர் பிரபுராம், மாவட்ட கலைப் பிரிவு செயலாளர் ரவிக்குமார், மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் பிரபு, மாவட்ட பாசறை இணை செயலாளர் முகமது அப்துல்லா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகி மகராஜ் குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அருப்புக்கோட்டையில் நகர செயலாளர் சோலை. சேதுபதி தலைமையில் அ.தி.மு.க. 54-ம் ஆண்டு தொடக்க விழா



**அருப்புக்கோட்டை.அக்.18.**

அருப்புக்கோட்டையில் அண்ணா.தி.மு.க. 54 ஆம் ஆண்டு துவக்க விழா நகரக் கழகச் செயலாளர் சோலை. சேதுபதி தலைமையில் நடைபெற்றது.

விருதுநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் ரவிச்சந்திரன் ஆலோசனைப்படி அருப்புக்கோட்டை நகரக் கழகச் செயலாளர் சோலை.சேதுபதி ஏற்பாட்டில் நடைபெற்றது.

துவக்க விழாவை தொடர்ந்து அருப்புக்கோட்டை நகர கழகம் சார்பாக புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா திமுக நிறுவனரும், முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

இந்நிகழ்ச்சியில் வடக்கு ஒன்றிய செயலாளர் போடம்பட்டி சங்கரலிங்கம், திருச்சுழி மேற்கு ஒன்றிய செயலாளர் கருப்பசாமி, தெற்கு ஒன்றிய செயலாளர் முத்துராமலிங்கம், நகர அவைத் தலைவர் பம்பாய் மணி, மாவட்ட துணைச் செயலாளர் ராமர், நகர அம்மா பேரவை தலைவர் சவுண்டையா, மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் சக்கரவர்த்தி சங்கர், ஒன்றிய அவைத் தலைவர் அசோக் வேலுச்சாமி, தர்மர் செல்வேந்திரன், சத்தியராஜன், நகரப் பொருளாளர் செந்தமிழ் செல்வன், அண்ணா பிரமுகர் சித்ரா ஜெய்சங்கர், ஜெயவேல் பாண்டியன், நகர மகளிர் அணி செயலாளர் பிரேமா, மாவட்டக் கலை பிரிவு செயலாளர் சங்கர் குமார், மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் ராமநாதன்,ராஜப்பன், நெல்சன்,விஜய் மல்லர், தேவராஜ்,சீரணி ரமேஷ், மற்றும் மாவட்ட நகர,ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# நத்தத்தில் அ.தி.மு.க. தொடக்க விழா கொண்டாட்டம்



**நத்தம்,அக்.18-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் பஸ் நிலையில் அருகில் அ.தி.மு.க. 54-ம் ஆண்டு தொடக்க விழா நிகழ்ச்சி நடந்தது.

இதற்கு கழக ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் கண்ணன் தலைமை தாங்கி எம்.ஜி.ஆர், ஜெயலலிதா உருவப்படங்களுக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து இனிப்புகள் வழங்கபட்டது.

இதில் ஒன்றிய செயலாளர்கள் ராமராசு, மணிகண்டன், மாவட்ட ஜெயலலிதா பேரவை இணை செயலாளர்கள் ஜெயபாலன் சுப்பிரமணி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சின்னாக்கவுண்டர், நகர அவைத் தலைவர் சேக்ஒலி, ஒன்றிய ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் விஜயன் உள்ளிட்ட பேரூராட்சி கவுன்சிலர்கள், ஒன்றிய, நகர, கிளை கழக அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பிள்ளையார் நத்தத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்

**நத்தம், அக்.18-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செந்துறை அருகே பிள்ளையார்நத்தத்தில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடந்தது.இதற்கு தி.மு.க. வடக்கு ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி தலைமை தாங்கினார். முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டிஅம்பலம், தாசில்தார் ஆறுமுகம், யூனியன் ஆணையாளர்கள் கிருஷ்ணன்,ரவீந்திரன், மண்டல துணை வட்டாட்சியர் சுந்தரபாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இந்த முகாமில் மகளிர் உரிமை தொகை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூகநலத்துறை, வீட்டுவசதி, ஆதிதிராவிடர் நலத்துறை உள்ளிட்ட 15 அரசு துறைகளின் சார்பில் பொதுமக்களிடம் இருந்து மனுக்கள் பெறப்பட்டது.முகாமில் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# ஒட்டன்சத்திரம் நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு சீருடைகள்



**ஒட்டன்சத்திரம், அக்.18-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் தீபாவளி பண்டிகையையொட்டி துப்புரவு பணியாளர்களுக்குநகர்மன்றதலைவர் திருமலைச்சாமி தலைமையில், நகர் மன்ற துணைத் தலைவர் வெள்ளைச்சாமி முன்னிலையில், ஆணையாளர் ஸ்வேதா சீருடைகள், மற்றும் இனிப்புகள் வழங்கினார்.

நிகழ்வில் பொறியாளர் சுப்ரமணியபிரபு, சுகாதாரஆய்வாளர் ராஜ்மோகன், கணக்காளர் சரவணன், வருவாய் ஆய்வாளர் விஜய் பால்ராஜ் உள்ளிட்ட நகராட்சி பணியாளர்கள் ,அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பரமக்குடி தீயணைப்பு நிலையத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை




**பரமக்குடி,அக்.18-**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தீயணைப்பு நிலைத்தில் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள கடைகளில் இருந்து தீபாவளி பண்டிகையை முன்னிட்டு லஞ்சம் வசூலிப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் பரமக்குடி தீயணைப்பு நிலையத்தில் இராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீர் சோதனை மேற்க்கொண்டனர்.அப்போது கணக்கில் வராத பணம் ரூ.35 ஆயிரத்தி 300 மற்றும், வெடி கிப்ட் பாக்ஸ்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

இதுதொடர்பாக தீயணைப்பு நிலைய அதிகாரி குணசேகரன் (50) மற்றும் பிற அலுவலர்களிடம் லஞ்ச ஒழிப்பு போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டனர்.

# நத்தம் அருகே கனமழையால் வீட்டின் சுவர் இடிந்து விழுந்தது



**நத்தம், அக்.18-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று மாலை பலத்த மழை பெய்தது.இதில் நத்தம் அருகே பாப்பாபட்டியை சேர்ந்த பஞ்சு (54) என்பவரின் குடிசை வீடு நேற்று இரவு அப்பகுதியில் பெய்த பலத்த மழையால் சேதமடைந்து திடீரென வீட்டின் உள்பக்க சுவர் பெயர்ந்து இடிந்து விழுந்தது.இதில் வீட்டில் இருந்த பொருட்கள் சேதமாகின. மேலும் அந்த சமயத்தில் வீட்டில் யாரும் இல்லாததால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. இது குறித்து தகவல் அறிந்த பண்ணுவார்பட்டி கிராம நிர்வாக அலுவலர் சுரேஷ் சம்பவ இடத்திற்கு சென்று நேரில் விசாரணை நடத்தினார்.

# கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றியத்தில் அ.தி.மு.க. 54-ம் ஆண்டு தொடக்க விழா



**மேலூர், அக்.18-**

அதிமுக கட்சியின் 54-ம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றியம், கருங்காலக்குடி ஊராட்சியில் கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளரும், முன்னாள் யூனியன் சேர்மன் வெற்றிச்செழியன் தலைமையில் கட்சி கொடியை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் சாகுல் ஹமீது, ஆசைதம்பி, முருகன், பழனிதுரை, சந்திரன், வீரபாண்டி, மனோகரன், கார்த்திக், சேட், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



**அ.தி.மு.க.வின் 54-வது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றம் சார்பில் அதன் மாவட்ட செயலாளர் எஸ்.டி.ஜெயபாலன் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. அன்னதானம் வழங்கினார். இதில் மாவட்ட, பகுதி,வட்ட,சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

## அ.தி.மு.க. 54-வது ஆண்டு துவக்க விழா

# டி.குன்னத்தூர் அம்மா கோவிலில் எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா சிலைகளுக்கு அ.தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை



**திருமங்கலம்,அக்.18-**

அ.தி.மு.க.வின் 54வது ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு திருமங்கலம் தொகுதி டி.குன்னத்தூரில் உள்ள அம்மா கோவிலில் எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா சிலைகளுக்கு கட்சி நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

கழக பொதுச் செயலாளர் எடப்பாடி யாரின் ஆணைக்கிணங்க அ.தி.மு.க.வின் 54-வது ஆண்டு துவக்கவிழா தமிழகம் முழுவதும் அதிமுகவினரால் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக மதுரை புறநகர் மேற்கு மாவட்ட கழகம் சார்பில் திருமங்கலம் தொகுதி டி.குன்னத்தூரில் உள்ள அம்மா கோவிலில் மறைந்த முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதாவின் திருவுருவச் சிலைகளுக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார் வழிகாட்டுதலின் பேரில் கட்சி நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.அப்போது 2026 சட்டமன்ற தேர்தலில் எடப்பாடி யார் தலைமையில் ஆட்சி அமைத்திட உறுதியேற்றிடுவோம் என கோஷங்கள் எழுப்பி சூளுரை ஏற்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர், முன்னாள் எம்.எல்.ஏ மகேந்திரன், மாவட்ட கழக அவை தலைவர் முருகன், பொருளாளர் வக்கீல் திருப்பதி,முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் தமிழரசன், நீதிபதி, மாணிக்கம், கருப்பையா,மாநில சிறுபான்மை பிரிவு பொருளாளர் ஜான் மகேந்திரன்,மாவட்ட அம்மா பேரவை செயலாளர் தமிழழகன், ஒன்றிய செயலாளர்கள் ராமசாமி, அன்பழகன்,வேப்பங்குளம் கண்ணன்,ராஜேஷ் கண்ணா, அரியூர் ராதாகிருஷ்ணன், பேரூர் செயலாளர்கள் பிச்சைகனி, பாலசுப்பிரமணி, மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் வாகை சிவசக்தி, அம்மாபட்டி கணேசன், தமிழரசன், வெள்ளாகுளம் ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.முன்னதாக அ.தி.மு.க.வின் 54வது ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு பொது மக்களுக்கு கட்சி நிர்வாகிகள் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

# கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றியத்தில் அ.தி.மு.க. 54-ம் ஆண்டு தொடக்க விழா



**மேலூர்,அக்.18-**

அதிமுக கட்சியின் 54-ம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றியம், கொட்டாம்பட்டி பஸ் நிலையம் முன்பாக மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் எஸ்.என். ராஜேந்திரன், கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றிய கழகச் செயலாளரும், முன்னாள் யூனியன் வைஸ் சேர்மன் குலோத்துங்கன் ஆகியோர் தலைமையில் கட்சி கொடியை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் உடன் கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் லெட்சுமணன், பொதியாடி, ராஜேந்திரன், ராஜமாணிக்கம், ராமன், நயினான், மூம்மூர்த்தி, வெள்ளைச்சாமி, சதாசிவம், நாகூர் ராஜா, பாரதி, காசி நாகூர், சௌந்தராஜன், ராமச்சந்திரன், மெய்யன், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



**அ.தி.மு.க.வின் 54-ம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட ஓ.பி.எஸ். அணி சார்பில் கே.கே.நகர் ஆர்ச் அருகில் உள்ள எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா ஆகியோரது உருவசிலைக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் எம்.பி.யுமான ஆர்.கோபாலகிருஷ்ணன் தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட செயலாளர் கே.முருகேசன், வி.கே.எஸ்.மாரிச்சாமி, துதி திருநாவுக்கரசு, ஏ.கே.முத்திருளாண்டி, கிருஷ்ணமூர்த்தி, புதூர் முனியசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.**



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதலல்வர் மு.க.ஸ்டாலினை மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன் சந்தித்து மாநில அளவிலான சாதனை கணக்கெடுப்பு அறிக்கையினை (பள்ளி கல்வித்துறை அமைச்சரின் மாவட்ட வாரியான மதிப்பாய்வு கூட்ட அறிக்கை) வழங்கினார். உடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உள்ளனர்.



அதி.மு.க. 54-வது ஆண்டில் அடியெடுத்து வைப்பதை கொண்டாடும் வகையில் நேற்று சென்னை ராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக்கழக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரது திருவுருவச்சிலைகளுக்கு நேற்று எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். அருகில் அ.தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## ஆணவ படுகொலையை...(1-ம் பக்க தொடர்ச்சி)

கொல்வதை நாகரீக சமூகத்தில் ஏற்க முடியாது. உலகம் அறிவு மயம் ஆகிறது,

ஆனால் அன்பு மயம் ஆவது தடுக்கப்படுகிறது என்பது தான் இன்று சீர்திருத்த எண்ணம் கொண்டவர்களை வாட்டி வருகிறது. உலகம் முழுக்க பரவி, நம் அறிவினால் மதிக்கப்பட்டு வரும் தமிழ்ச் சமுதாயம், உள்ளூரில் சண்டை போட்டுக்கொள்வது என்ன நியாயம்? என்பதுதான் நம்மை வருத்தும் கேள்வி ஆகும்.

**ஓய்வு பெற்ற நீதிபதி...**

ஆணவப் படுகொலைகளை தடுக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் புதிய ஆணையம் அமைக்கப்படும். சட்ட வல்லுநர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள், மானுடவியல் அறிஞர்கள் கொண்ட இந்த ஆணையம் பல்வேறு தரப்பிலும் கருத்துகளை பெற்று உரிய பரிந்துரைகளை அரசுக்கு வழங்கும், அதன் அடிப்படையில் தனிச்சட்டம் இயற்றப்படும். எதன் காரணமாகவும் ஒருவரை கொலை செய்வதை நாகரீக சமூகம் ஏற்காது.

**முற்றுப்புள்ளி வைக்க...**

அவ்வப்போது எங்கேயேனும் நடக்கும் சம்பவம் தலைகுனிய வைக்கிறது. அனைத்து விதமான ஆதிக்கத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

ஆதிக்க எதிர்ப்பும், சமத்துவச் சிந்தனையும் கொண்ட சுயமரியாதையும், அன்பும் சூழ்ந்த மானுடத்தை உருவாக்குவதற்கான பரப்புரையை ஓர் இயக்கமாக முன்னெடுத்து செல்ல வேண்டியது நம் அனைவரின் கடமை. சீர்திருத்தப் பரப்புரையை குற்றத்திற்கான தண்டனையும், வாளும் கேடயமுமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.


இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறினார்.



சென்னையில் நேற்று அமைச்சர் என்.கயல்விழி தலைமையில் அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியின் இயக்குநர் மற்றும் பயிற்சித்துறைதலைவரின் கீழ் இயங்கி வரும் அகில இந்திய குடிமை பணிகள் தேர்வு பயிற்சி மையம், போட்டித்தேர்வு பயிற்சி மையங்கள், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி மையம், அ (ம) ஆ பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி மையம் மற்றும் அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் சார்பில் "எதிர்கால மருத்துவம் 2.0" 2-வது பன்னாட்டு மருத்துவ மாநாட்டை தொடங்கி வைத்து துணைவேந்தர் நாராயணசாமி இயற்றிய "நவீன மருத்துவ முன்னேற்றத்தில் செயற்கை நுண்ணறிவின் பங்கு" எனும் நூலினை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் வெளியிட்டார். இதில் முதன்மைச்செயலாளர் ப.செந்தில்குமார் உள்ளார்.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பால்வளத்துறையின் மதுரை ஒன்றியத்திற்கு ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை பால் வழங்கிய 632 சங்கங்களை சேர்ந்த 9,766 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.5.63 கோடி மதிப்பில் ஊக்கத்தொகை வழங்குவதன் அடையாளமாக 5 பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு ஊக்கத்தொகைக்கான காசோலையினை பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் வழங்கினார். இதில் செயலாளர் ந.சுப்பையன் உள்ளார்.

### வெளிநாடுகளில் இருந்து தொழில்துறையில் ஈட்டப்பட்ட

# முதலீடுகள் குறித்து தமிழக அரசு அறிக்கை வெளியிட வேண்டும்

## எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

சென்னை, அக். 18-

தொழில்துறையில் ஈட்ட முதலீடுகள் குறித்து அறிக்கை வெளியிட வேண்டும் என்று தெரிவித்த அ.தி.மு.க. பொதுச் செயலளார் எடப்பாடி பழனிசாமி, தமிழக அரசின் அலட்சியம் காரணமாக தான் இருமல் மருந்து குடித்து 25 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். தி.மு.க. ஆட்சியில் உருட்டுக் கடை அல்வாதான் கிடைக்கும்.'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்த அ.தி.மு.க. பொதுச் செயலளார் எடப்பாடி பழனிசாமி, செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசும்போது: இருமல் மருந்து குடித்து, 25 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். தமிழக அரசு அலட்சியமாக இருந்ததால் உயிரிழப்புகள் நடந்துள்ளது. காஞ்சிபுரத்தில் தனியார் நிறுவனம் தயாரித்த இருமல் மருந்தை குடித்து 25 பேர் உயிரிழந்துள்ளனர். இருமல் மருந்தால் குழந்தைகள் பலியான சம்பவம் தொடர்பாக சட்டப் பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தோம்.

மருந்து நிறுவனத்தில் நடந்த சோதனையில் முறைகேடு கண்டறியப்பட்டு ஏற்கெனவே தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மருந்து நிறுவனம் தொடர்ந்து முறைகேட்டில் ஈடுபட்டும், 2024 மற்றும் 2025ல் தமிழக அரசு சோதனை செய்யவில்லை. மருந்து உற்பத்தியை சரிவர கண்காணிக்காததால் தான் இறப்பு நேர்ந்துள்ளது.

சிறுநீரக முறைகேடு புகாரில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? அமைச்சர் ஏதேதோ சொல்லி மழுப்பி முடித்துவிடுகிறார். தி.மு.க. அரசாங்கத்தில் உருட்டுக் கடை அல்வா தான் கிடைக்கும். 2021-ம் ஆண்டில் தீபாவளியின் போது 525 அறிவிப்புகளை வெளியிட்டார் முதல்வர் ஸ்டாலின். அதில் 10% அறிவிப்பை கூட நிறைவேற்றவில்லை. இப்போது அனைவருக்கும் அல்வா கொடுத்துவிட்டார். விவசாயிகளுக்கு துரோகம் செய்யக்கூடிய அரசாக தி.மு.க. உள்ளது. தொழில்துறையில் ஈட்ட முதலீடுகள் குறித்து அறிக்கை வெளியிட வேண்டும். தி.மு.க.வில் எல்லாமே வெற்று அறிவிப்பு தான்''

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### நெருங்கும் தீபாவளி பண்டிகை:

# விமான கட்டணம் பல மடங்காக உயர்வு

சென்னை, அக். 18-

தீபாவளி பண்டிகையை கொண்டாட சிலநாட்களே உள்ள நிலையில், விமான கட்டணங்கள் பல மடங்காக உயர்ந்துள்ளது பயணிகளை அதிர்ச்சிகுள்ளாகியுள்ளது. சென்னையில் இருந்து மதுரைக்கு சாதாரண நாட்களில் ரூ.3,129-ஆக இருக்கும் கட்டணம் தற்போது ரூ.17,683 வரை உயர்ந்துள்ளது.

நாடு முழுவதும் தீபாவளி பண்டிகை வருகிற 20-ந்தேதி (திங்கட்கிழமை) கொண்டாடப்பட உள்ளது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னையில் வசிப்பவர்கள் பெரும்பாலானோர் தங்களின் சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம். அதற்கு பேருந்து, ரெயில், விமானம் போன்ற போக்குவரத்து வசதியை பயன்படுத்துவார்கள். தீபாவளி பண்டிகை நெருங்கி வருவதால், பலரும் சொந்த ஊருக்கு கிளம்ப தொடங்கி உள்ள நிலையில் வழக்கத்தை விட விமான கட்டணங்கள் பல மடங்கு உயர்ந்துள்ளன.

சென்னையில் இருந்து மதுரைக்கு சாதாரண நாட்களில் ரூ.3,129-ஆக இருக்கும் கட்டணம் தற்போது ரூ.17,683 வரை உயர்ந்துள்ளது. சென்னையில் இருந்து திருச்சிக்கு சாதாரண நாட்களில் ரூ.3,608-ஆக இருக்கும் கட்டணம் தற்போது ரூ.15,233 வரை உயர்ந்துள்ளது. சென்னையில் இருந்து கோவைக்கு சாதாரண நாட்களில் ரூ.4,351-ஆக இருக்கும் கட்டணம் தற்போது ரூ.17,158 வரை உயர்ந்துள்ளது. சென்னையில் இருந்து தூத்துக்குடிக்கு சாதாரண நாட்களில் ரூ.3,608-ஆக இருக்கும் கட்டணம் தற்போது ரூ.17,053 வரை உயர்ந்துள்ளது.

சென்னையில் இருந்து டெல்லிக்கு சாதாரண நாட்களில் ரூ.5,933-ஆக இருக்கும் கட்டணம் தற்போது ரூ.30,414 வரை உயர்ந்துள்ளது. சென்னையில் இருந்து மும்பைக்கு சாதாரண நாட்களில் ரூ.3,356-ஆக இருக்கும் கட்டணம் தற்போது ரூ.21,960 வரை உயர்ந்துள்ளது. சென்னையில் இருந்து கொல்கத்தாவுக்கு சாதாரண நாட்களில் ரூ.5,293-ஆக இருக்கும் கட்டணம் தற்போது ரூ.22,169 வரை உயர்ந்துள்ளது. சென்னையில் இருந்து ஐதராபாத்துக்கு சாதாரண நாட்களில் ரூ.2,926-ஆக இருக்கும் கட்டணம் தற்போது ரூ.15,309 வரை உயர்ந்துள்ளது. சென்னையில் இருந்து கவுகாத்திக்கு சாதாரண நாள் ரூ.6,499-ஆக இருக்கும் கட்டணம் தற்போது ரூ.21,639 வரை உயர்ந்துள்ளதால் மக்கள் பெரிதும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

### அரபிக்கடலில் இன்று

# புதிய புயல் சின்னம் உருவாகிறது

## வரும் 21-ம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு

சென்னை, அக். 18-

தென்கிழக்கு அரபிக்கடல், லட்சத்தீவு பகுதிகளில் இன்று காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.இதனால் தமிழ்நாட்டில் வரும் 21-ந்தேதி வரை கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை நேற்று முன்தினம் தொடங்கியது. இதையொட்டி தமிழகத்தில் வரும் 20-ம் தேதி வரை பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்து இருந்தது. இந்நிலையில் இன்று காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடல், லட்சத்தீவு பகுதிகளில் இன்று காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது. காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 48 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைய வாய்ப்பு உள்ளது. தென்கிழக்கு வங்கக்கடலில் வரும் 24-ந்தேதி காற்றழுத்த தாழ்வு உருவாகி மேற்கு - வடமேற்கு நோக்கி நகர வாய்ப்பு உள்ளது. இதனால் தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், மாஹேவில் இன்று முதல் வரும் 21-ந்தேதி வரை கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவித்துள்ளது.



அ.தி.மு.க.வின் 54-வது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு மதுரை கே.கே.நகரில் உள்ள மறைந்த முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா சிலைக்கு நேற்று மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் அ.தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.